Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, JULY 24, 2022

வெள்ளிக்கிழமை ஜூன் 24, 2022 | ஒளி: 08 கதிர்: 031 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

# உயிரைக் குடித்த டீசல் வரிசை

களுத்துறை, பட்டகொடையில் டீசலுக்காக 5 நாள்கள் காத்திருந்த 63 வயதானவர் வாகனத்துக்கு உள்ளே மரணமடைந்துள்ளார்.

டீசலை பெற்றுக்கொள்வதற்காக கடந்த 5 நாள்களாக காத்திருந்த டிப்பர் ரக வாகனத்தின் சாரதி, அந்த வாகனத்துக்குள்ளே மரணமடைந்துவிட்டார்.

தொடர்ச்சி P2



# அரசியல் சூதாட்டமே அரங்கேற்றப்படுகிறது

நாட்டில் இன்று அரசியல் சூதாட்டமே இடம்பெற்று வருவதாகவும், இந்தச் சூதாட்டத்தில் துரதிர்ஷ்டவசமாக 220 இலட்சம் மக்களும் இரையாக்கப்பட்டு உள்ளனர் எனவும், இங்கு மக்களின் அபிலாஷைகள் நசுக்கப்பட்டுகின்றன எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு

# ஆதரவளிக்க இந்தியா தயார்

### ஜனாதிபதி, பிரதமருடான சந்திப்பில் இந்திய தூதுக்குழு தெரிவிப்பு

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய நிதி அமைச்சின் செயலாளர் அஜய் சேத் , தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன், வெளியுறவு செயலாளர் வினய் குவாத்ரா ஆகியோர் நேற்று (23) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு முழு மனதுடன் ஒத்துழைப்புகளை வழங்கிவரும் இந்தியாவிற்கு தாம் நன்றிகளை தெரிவிப்பதாகவும் கூறியுள்ளனர்.



முதலீடுகளை மேம்படுத்தல், தொடர்புகள் மற்றும் பொருளாதார உறவுகளை வலுவாக்குதல் ஊடாக துரிதமான பொருளாதார மீட்சிக்கு இலங்கைக்கு ஆதரவளிக்க இந்தியா தயாராக உள்ளதாக இச்சந்திப்பில் இந்திய தூதுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் என்ற கொள்கையில் இலங்கையின் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்திய - இலங்கை உறவின் மேம்பாட்டிற்காக இரு தரப்பும் தமது அர்ப்பணிப்பினை இச்சந்திப்பின்போது உறுதிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2



# பயோ எரிபொருளை உற்பத்தி செய்யலாம்

எம்.றொசாந்த்

இலகுவாக கிடைக்கும் பொருட்களை வைத்துக் கொண்டு, பயோ பெற்றோல் மற்றும் பயோ டீசல் என்பவற்றை குறைந்த விலையில் உற்பத்தி செய்யமுடியுமென தெரிவித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆய்வு கூட உதவியாளரான நவாலியைச் சேர்ந்த செல்வராசா சுரேஸ்குமார், அதற்கான செய்முறை விளக்கத்தை நிகழ்த்திக் காட்டினார்.

தொடர்ச்சி P2

# பாடசாலைகளை மீள் திறக்க கவனம்



பாடசாலை கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் திங்கட்கிழமை ( 27) முதல் மீண்டும் ஆரம்பிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



தமிழ் தேசிய பிரச்சினைக்கு தீர்வு கண்டால்

# நாடு நெருக்கடியில் இருந்து விடுபடும்

இலங்கையின் பொருளாதார பின்னடைவுக்கு, தீர்வு எட்டப்படாத தமிழ் தேசிய பிரச்சினையே பிரதான காரணம் எனவும், நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறவேண்டுமானால் தமிழ் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பது மிகவும் அவசியமானது எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# 3 வாகனங்கள் சிக்கின

இங்கிலாந்தில் இருந்து சட்டவிரோதமான முறையில், கொண்டுவரப்பட்ட 8 கோடி ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியைக் கொண்ட அதிசொகுசு கார்கள் மூன்று, ஒருகொடவத்த சுங்க பிரிவினர் நேற்று (23) கைப்பற்றியுள்ளனர் என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சு மட்டுமே

### பயங்கரவாத தடைச்சட்டத்திலும் திருத்தம் அவசியம்



பயங்கரவாத தடை சட்டத்தை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டுகளே அதிகமாகும். அதுமட்டுமல்லாது சர்வதேச உடன்படிக்கைகளுக்கு முரணான விதத்தில் இலங்கையின் பயங்கரவாத தடை சட்டம் காணப்படுகின்ற காரணத்தால் அதில் மாற்றங்களை செய்தாக வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

# இயற்கை உபாதைக்கு 100 ரூபாய் அறவீடு

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நின்ற நபரொருவர் வர்த்தக நிலையத்தின் மலசலக்கூடத்தை பயன்படுத்தியமைக்காக, வர்த்தகர் ஒருவர் 100 ரூபாய் அறவிட்ட சம்பவமொன்று ஹோமாகம, கொடகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ சாரதியொருவர் தன்னுடைய ஓட்டோவுக்கு எரி பொருளை பெற்றுக்கொள்வதற்காக மேற்படி பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு வந்துள்ளார்.

தொடர்ச்சி P2

இந்திய தூதுக்குழுவின் வருகை

# கச்சத்தீவை மீள பெறுவதற்காகவா?

பா.நிரோஸ்

இந்தியா எப்போதுமே உள்நோக்கத்துடனேயே இலங்கைக்கு கடன்களை வழங்கும். இப்போதும் இந்திய தூதுவர் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது. இவர்களின் நோக்கம் கச்சத்தீவை திரும்பப் பெறுவதற்காகவா என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று(23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த



போதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட அறிவிப்பை விடுத்த ரணில், இந்தியாவின் மூன்று பிரதிநிதிகள் இலங்கைக்கு வருவதாக கூறினார்.

தொடர்ச்சி P2

# எரிபொருள் நிலையத்தில் பொலிஸ், இராணுவ அதிகாரிகள் கைகலப்பு

எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவருக்கும் இராணுவ அதிகாரி ஒருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# மார்பகங்கள் குறித்து ஹிருணிகா பெருமை

### அவமதிக்காதீர்கள் என்கிறார் ரணில்

மூன்று பிள்ளைகளின் தாயான ஹிருணிகா பிரேமசந்திரவை அவமதிக்கும் வகையில் அவரது புகைப்படங்களை பகிரவேண்டாமென கேட்டுக்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அநாகரிகமாக நடந்துகொள்ள வேண்டாம் என்றும் சமூக ஊடக ஆர்வலர்கள் மற்றும் பயனாளிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் பெண்கள் சக்தியால் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்கு முன்பாக நேற்று (22) முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அங்கு கடமையிலிருந்த பெண் பொலிஸாரை, ஹிருணிகா பிரேமசந்திர கட்டியணைத்தார்.

அதன்பின்னர், அவரது மார்பகங்களை அவமதிக்கும் வகையிலான பதிவுகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன.

தொடர்ச்சி P2



# ஒத்துழைப்பை வலுப்படுத்தும் சந்தர்ப்பம் இதுவாகும்

### பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதன் மூலம் ஆடை, விவசாயம், சுகாதாரம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்படும் என இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் அரிபுல் இஸ்லாம் தெரிவித்துள்ளார்.

நேற்று (23) ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போதே உயர்ஸ்தானிகர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 2022, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 50 ஆண்டு பூர்த்தியாகிறது.

தொடர்ச்சி P2



# ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் நால்வரும் மறுத்தனர்

22.05.2022 ஆம் திகதியன்று நல்லூர் பிரதேச சபையின், மாதாந்த அமர்வின்போது சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக கூறப்பட்டு ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்தி உண்மைக்கு புறம்பானதென குறித்த பிரதேச சபையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

சிறுவர்களின் அவசர தேவைகளுக்காக

# 800,000 அமெரிக்க டொலரை வழங்குகிறது நியூசிலாந்து



இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, நாட்டை மிக மோசமாக பாதித்துள்ளதை உணர முடிவதாகவும், நியூசிலாந்து அரசாங்கம் இலங்கைக்கு இயலுமான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ள நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் நனையா மஹூதா, நாட்டின் பொருளாதார நெருக்கடியால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு அவசர தேவைகளுக்காக இலங்கையில் உள்ள யுனிசெப் நிறுவனத்திற்கு 800,000 அமெரிக்க டொலரை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையில் இலங்கைக்கு ஒத்துழைப்புகளை வழங்க தாம் சர்வதேச சமூகத்துடனும், குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் இணைந்து செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

## அரசியல் சூதாட்டமே அரங்கேற்றப்படுகிறது

மக்களின் அபிப்பிராயங்களை பல்வேறு விதமான உத்திகளைப் பிரயோகித்து ஆட்சியில் இருக்கும் தரப்பு பல்வேறு வழிகளில் நசுக்கி, அவர்களின் நோக்கங்களை சாத்தியப்படுத்திக்கொள்ளும் நிலையே உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று (23) நடைபெற்ற அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பான கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் தனது பதவியை பாதுகாத்துக்கொண்டு தனது இருப்பை தக்கவைப்பதற்காகவே சகலதையும் மேற்கொண்டு வருகின்றதே அன்றி மக்களின் நலனுக்காக அல்ல என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தற்போது நாட்டில் ஜனாதிபதி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்வது முதல் அரசியலமைப்பு திருத்தம் வரை சகல துறைகளிலும் மாற்றம் வேண்டி மக்கள் போராட்டம் இடம்பெற்றுவருகின்றது என்றார்.

மக்கள் போராட்டத்தின் மீது மே. 9ஆம் திகதி தாக்குதல் நடத்தியவர்கள் சுதந்திரமாக நடமாடும் போது, பாதிக்கப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களின் மனித உரிமைகள் இரக்கமற்ற முறையில் மீறப்பட்டுள்ளன என்றார்.

முழு நாடும் அரசியல் சீர்திருத்தம்,மாற்றத்தை எதிர்பார்த்தாலும், மக்கள் ஆதரவு இல்லாத ஒரு நபர் வாயில் காப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதோடு, ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாக்கும் பாதுகாப்புப் பிரதானியாக நியமிக்கப்பட்டு, அரசியல் சூதாட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

## ஆதரவளிக்க இந்தியா தயார்

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் பொருளாதார மீட்சியை அடைவதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து இரு தரப்பினரும் ஆழமாக கலந்துரையாடினர். இந்தச் சூழலில், இந்தியா-இலங்கை முதலீட்டை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் எடுத்துரைத்தனர். குறிப்பாக உள்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார தொடர்புகள் ஆகிய துறைகளில் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

அதேபோல் வெளிவிவகார செயலாளர் வினய் குவாத்ரா, இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவையும் சந்தித்திருந்தார். இரு நாடுகளுக்கு இடையிலான நெருக்கமான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளில் பணியாற்ற தாம் விரும்புவதாகவும், இரு தரப்பு நட்புறவை வலுப்படுத்த வேண்டிய கட்டாயம் இருப்பதுவும் இதன்போது இந்திய வெளிவிவகார செயலாளர் தெரிவித்துள்ளார் .

ஒருநாள் பயணமாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, விசேட விமானத்தின் மூலமாக நேற்று (23) வருகைதந்திருந்த இந்திய தூதுக்குழுவினரை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்றார். அந்த குழுவினர், நேற்று மாலையே புறப்பட்டுச் சென்றுவிட்டனர்.

## உயிரைக் குடித்த டீசல் வரிசை

அஹுங்கம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 63 வயதான வீரப்புலி சுனில் என்பவரே மரணமடைந்துள்ளார்.

எரிபொருள்களை பெற்றுக்கொள்வதற்காக வரிசைகளில் நின்றிருந்தபோது, மயங்கிவிழுந்து, மாரடைப்பு ஏற்பட்டு இன்றேல் பல்வேறான உபாதைகளின் ஊடாக இதுவரையிலும் 10 பேர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயோ எரிபொருளை உற்பத்தி செய்யலாம்

இலகுவாக கிடைக்கும் மூலப்பொருட்களான தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய் ,சாம்பல் போன்றவற்றை வைத்து பயோ டீசலினை இலகுவாக தயாரிக்க முடியும். அதேபோன்று நீர் மற்றும் சிரட்டைக்கரி போன்ற காபன் வகைகளை பயன்படுத்தி பயோ பெற்றோலினை இலங்கையில் உற்பத்தி செய்ய முடியும் என தெரிவித்துள்ளார்.

இதற்கான தயாரிப்பு மாதிரி செய்முறை விளக்கமும் அவரால் நிகழ்த்திக் காட்டப்பட்டது. பயோ டீசலினை சாதாரணமாக வீட்டினிலேயே செய்யமுடியும் எனவும் ,பயோ பெற்றோல் தயாரிப்பதற்கு சுமார் 50 மில்லியன் முதலீடு தேவைப்படும் என்றார்.

இதற்கு அனுசரணையாளர்களும் அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் கிடைக்கும் பட்சத்தில் சூழலுக்கு பாதிப்பில்லாத எரிபொருளை மிக குறைந்த விலையில் உற்பத்திசெய்து எரிபொருள் பிரச்சினைக்கு ஓரளவுக்கேனும் தீர்வு காண முடியும் என்றார்.

## ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சு மட்டுமே

ஆனால் இப்போது நாம் கொண்டுவரும் 21 ஆம் திருத்தத்தை மிகவும் கவனமாக கையாண்டு வருகின்றோம். குறிப்பாக ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சை மட்டும் வைத்துக்கொள்ள முடியும் என்ற திருத்தங்களை செய்துள்ளோம். அத்துடன் சர்வசன வாக்கெடுப்புக்கு செல்லாது நிறைவேற்றும் விதமாக இது கொண்டுவரப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

அதேபோல் இடைக்கால தீர்மானங்களுக்கு அமைய அமைச்சுகளுக்கான அமைச்சர்கள் நியமிக்கப்படாதவிடத்து 14 நாட்களுக்கு குறித்த அமைச்சை ஜனாதிபதி வைத்துக்கொள்ள முடியும். அத்துடன் சுயாதீன ஆணைக்குழுக்கள் அனைத்துமே

> **சட்டத்தின் மீதான குற்றச்சாட்டை விடவும் இந்த சட்டத்தை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டே அதிகமாகும்**

> **முக்கியமான திருத்தங்களை செய்தாக வேண்டும் அதேபோல் தொல்பொருள் சட்டத்திலும் மாற்றங்களை செய்தாக வேண்டும்**

பலப்படுத்தப்படும். 20 ஆம் திருத்தத்தில் நீக்கப்பட்ட சகலதும் 21 ஆம் திருத்தத்தில் கொண்டுவரப்படும் என்றார்.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளது. இதில் சட்டத்தின் மீதான குற்றச்சாட்டை விடவும் இந்த சட்டத்தை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டே அதிகமாகும். இது சர்வதேச உடன்படிக்கைகளுடன் முரண்படும் சட்டமாக உள்ளது. எனவே இது குறித்தும் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. இதில் முக்கியமான திருத்தங்களை செய்தாக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். அதேபோல் தொல்பொருள் சட்டத்திலும் மாற்றங்களை செய்தாக வேண்டும் . இதுவும் நாட்டில் சில பிரச்சினைகளை ஏற்படுத்திள்ளது என்றார்.

## இயற்கை உபாதைக்கு...

சில நாட்கள் காத்திருந்தார். அந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் எரிபொருள் முடிந்துவிட்டமையால் இன்னும் இரண்டு நாட்களுக்கு காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அவ்வாறு காத்திருந்த போது மலசலக்கூடத்துக்கு செல்லவேண்டிய தேவை அந்நபருக்கு ஏற்பட்டது.

அருகிலிருந்த வர்த்தக நிலையத்துக்குச் சென்ற அந்நபர், தன்னுடைய பிரச்சினையை அந்த வர்த்தகரிடம் எடுத்துரைத்துள்ளார்.

வர்த்தக நிலையத்துக்கு பின்னால் இருக்கும் மலசலக்கூடத்தை காண்பித்து அங்குச் செல்லுமாறு ஓட்டோ சாரதியிடம் வர்த்தகர் கூறியுள்ளார்.

தன்னுடைய இயற்கை உபாதையை நிறைவு செய்துவிட்டு திரும்பிய ஓட்டோசாரதி, வர்த்தகருக்கு நன்றியைத் தெரிவித்தவிட்டு வர்த்தக நிலையத்திலிருந்து வெறியேற முயன்றுள்ளார். எனினும், ஓட்டோ சாரதியை தடுத்துநிறுத்திய வர்த்தகர் மலசலக்கூடத்தை பயன்படுத்தியமைக்காக 100 ரூபாய் கேட்டுள்ளார். அப்போதுதான், ஓட்டோ சாரதிக்கு தெய்வம் நினைவுக்கு வந்தது.

போனதை மீளவும் பெறமுடியாது என நினைத்துக்கொண்ட ஓட்டோ சாரதி, 100 ரூபாயை வர்த்தகரிடம் கொடுத்துவிட்டு வர்த்தக நிலையத்தில் இருந்து வெளியேறினார்.

## நாடு நெருக்கடியில் இருந்து விடுபடும்

ஊழல், தவறான நிர்வாகம், அனாவசியமான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை போன்றன தற்போதைய பொருளாதார நெருக்கடி உருவாக ஒரு காரணமாக இருந்தாலும் கூட தீர்க்கப்படாத தமிழ் மக்களின் அபிலாசைகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தடையாக அமைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் தீர்க்கப்படாத அரசியல் பிரச்சினையே 30 வருட யுத்தத்திற்கும் அதற்காக செலவிடப்பட்ட பாரிய நிதிக்கும் வழிவகுத்ததாக தெரிவித்துள்ள சம்பந்தன், யுத்தம் இடம்பெறாதிருந்தால் நாட்டின் பொருளாதாரம் இந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்காது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்வு காணப்படாத தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான கோரிக்கைக்கு தீர்வு காண்பதன் மூலம் சர்வதேச சமூகத்திற்கு இலங்கை புதிய முகத்தினை காட்ட முடியும் எனவும் , நாட்டின் அனைத்து மக்களும் தங்களின் இறைமையை பயன்படுத்தக்கூடிய வகையிலான ஒரு அரசியல் யாப்பின் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் சேர்ந்து பணியாற்றி, நாட்டினை கட்டியெழுப்ப முடியும் என்பதையும் உலகிற்கு நாம் ஒற்றுமையாக உள்ளோம் என்பதையும் காண்பிக்க முடியுமெனவும் குற்றிப்பிட்டுள்ளார்.

## பாடசாலைகளை மீள் திறக்க கவனம்

பாடசாலைகள் நடத்தப்படும் முறை தொடர்பில் இன்று (24) மாகாண மட்டத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த பேச்சுவார்த்தையின் பின்னர், எதிர்வரும் திங்கட்கிழமை (27) முதல் வழமை போன்று பாடசாலை கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து பரிசீலிக்கப்படுமெனன கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பல பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நேற்றைய வருகை 65 சதவீதமாக பதிவாகியுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

## ரூ.8 கோடி...

கொள்கலன்களின் வாகனங்களின் உதிரிபாகங்கள் இருப்பதாகக் கூறியே, கொள்கலன்களை இறக்குவதற்கு முயற்சி செய்துள்ளனர். எனினும் அதில், பென்ஸ், அவுடி மற்றும் பயட் ஆகிய வகைகளைச் சேர்ந்த கார்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

## மார்பகங்கள் குறித்து ஹிருணிகா பெருமை

அதனையடுத்தே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசியல் காரணங்களுக்காக ஹிருணிக்கா எனது வீட்டிற்கு அருகில் வந்து ஆர்ப்பாட்டம் செய்தார். அதனை நாகரீகமாக கருதி, அரசியல் ரீதியில் அணுகி தீர்க்கவேண்டும் அத்துடன், பெண்மையை ,தாய்மையை கொச்சைப்படுத்தும் வகையில் எவரும் அநாகரீகமாக நடந்துகொள்ளக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

தன் மார்பகங்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பதிவிடப்பட்ட கேலி, கிண்டல் மற்றும் கொச்சப்படுதியமை

> **, எங்கோ ஒரு வரிசையில் இந்த தேசத்தின் ஒரு குடிமகன் இறந்திருப்பான் என்ற செய்தியை அறிந்திருப்பீர்கள்**

தொடர்பில், தனது பேஸ்புக்கில் பதிவிட்டுள்ள ஹிருணிகா பிரேமசந்திர.

”எனது மார்பகங்கள் குறித்து நான் பெருமிதம் அடைகிறேன் அதனூடாக மூன்று அழகிய குழந்தைகளுக்கு நான் தாய்ப்பால் ஊட்டியுள்ளேன். நான் அவர்களை வளர்த்துள்ளேன். எனது ஒட்டுமொத்த உடலையும் அவர்களுக்காக அர்ப்பணித்தேன்.

ஆர்ப்பாட்டத்தின் போது வெளித்தோன்றிய எனது மார்பகங்களை வைத்து கிண்டலும், கேலியும் செய்பவர்கள், தாம் குழந்தைகளாக இருக்கும் போது தமது தாய்மார்களின் மார்பகக் காம்புகளிலிருந்து தாய்ப்பால் அருந்தியவராகவே இருப்பர் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

எப்படியென்றாலும், எனது மார்பகங்களைப் பற்றி நீங்கள் கதைத்து, மீம்ஸ்களை உருவாக்கி, நகைத்து இருக்கும் போது, எங்கோ ஒரு வரிசையில் இந்த தேசத்தின் ஒரு குடிமகன் இறந்திருப்பான் என்ற செய்தியை அறிந்திருப்பீர்கள் என்றும் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## கச்சத்தீவை மீள...

இந்தியா இலங்கைக்கு உள்நோக்கங்களின்றி கடனை வழங்குவதில்லை. இவ்வாறான நிலையில் கச்சத்தீவை மீளப் பெற்றுக்கொள்வதற்காகவா இந்திய பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகிறார்கள் எனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்ற அமர்வை ஒரு வாரத்துக்கு புறக்கணிக்க ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்திருந்தபோது பாராளுமன்றத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தி தப்பியோடியதாக ரணில் விமர்சித்திருக்கிறார். மேலும் தன்னால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் தப்பியோடுவது தனக்கு தோல்வி எனவும் ரணில் கூறியுள்ளார்.ரணில் தோல்வியடைந்துள்ளார் என்பதே இப்போதா அவருக்கு தெரிய வருகின்றது எனவும் தெரிவித்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்தே நாம் பயிற்றுவிக்கப்பட்டோம். அவரிடமிருந்து நல்ல விடயங்களை நாம் கற்றுக்கொண்டுள்ளோம். எனினும், ராஜபக்சக்களை பாதுகாப்பது, திருடர்களை பாதுகாப்பது உள்ளிட்ட எந்த ஒரு கெட்ட விடயங்களையும் நாம் கற்றுக்கொள்ளவில்லை எனவும் மரிக்கார் கூறினார்.

## எரிபொருள்...

வரக்காபொல, தும்மலதெனிய பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்தே, கைகலப்பாக மாறியுள்ளது.

வாக்குவாதத்தைத் தொடர்ந்து லெப்டினன்ட் கேர்ணல் பொலிஸ் அதிகாரியைத் தாக்கியதை பெட்ரோல் நிலையத்தில் உள்ள சிசிடிவி கெமராவில் பதிவாகியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வரக்காபொல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட லெப்டினன் கேர்ணல் வரக்காபொல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் நால்வரும் மறுத்தனர்

வடக்கு கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் உண்மையில் இனப்படுகொலைதான் என்பதை நல்லூர் பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு அதனை தீர்மானமாக நிறைவேற்றியிருந்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தன. குறித்த தீர்மானமானது ஏகமனதாக ஏற்றுக்கொ ள்ளப்படவில்லை என்றும் இந்த தீர்மானத்தை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் பிரதிநிதித்துவம் செய்யும் நான்கு உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர். இவ்விடயத்தில் தமக்கு எதுவித தொடர்பும் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## ஒத்துழைப்பை வலுப்படுத்தும்...

இந்த காலகட்டத்தில், இரு அரசாங்கங்களும் மிகவும் நெருக்கமாகவும் இணக்கமாகவும் செயற்பட முடிந்தது. தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பங்களாதேஷ் வழங்கும் ஒத்துழைப்பை ஜனாதிபதி அவர்கள் பாராட்டினார். வர்த்தகம், சுற்றுலா மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர், தற்போதைய நிலைமையை இலங்கையால் விரைவாக வெற்றிகொள்ள முடியும் என நம்பிக்கை தெரிவித்தார்.

ஒருநாள் சேவையூடாக

## கடவுச்சீட்டை விநியோகிக்க தீர்மானம்

ஒருநாள் சேவையை பெறுவதற்காக, நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்களின் நலன் கருதி ஒருநாள் சேவையூடாக கடவுச்சீட்டை விநியோகிப்பதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது . தற்போது நிலவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் நாள் ஒன்றுக்கு 50 சதவீதமான பணிக்குழாமினரை கொண்டே செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுக்கப்படுகின்றன என குறிப்பிட்டுள்ளார். இரண்டு சேவை முறைமைகளின் அடிப்படையில் இவ்வாறு ஒருநாள் சேவையை பெறுவதற்காக கடவுச்சீட்டுகளை வழங்க தீர்மனம் எடுத்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுபாட்டாளர் நாயகம் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.




15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும்

## டிஜிட்டல் அடையாள அட்டை

15 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் பதிவு செய்து புதிய டிஜிட்டல் அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்பதிவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார். “Sri Lanka Unique Digital ID” என அழைக்கப்படும் இந்த புதிய அடையாள அட்டையில் கைரேகைகள் மற்றும் இரத்த வகை உள்ளிட்ட நபரின் தகவல்களுக்கு மேலதிகமாக உயிரியல் தகவல்களும் உள்ளடக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய கடன் உதவியில் இந்த புதிய அடையாள அட்டை வழங்கப்படும் எனவும், ஒன்றரை வருடத்திற்குள் 17 மில்லியன் மக்களை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மேல்மாகாணத்தில் 283 ஏக்கரில் பயிர்ச்செய்கை



மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள 283 ஏக்கர் காணிகளில் பயிர்ச் செய்கையை இலங்கை காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கவுள்ளது. எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய உணவு நெருக்கடிக்கு விரைவான தீர்வாக இது செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் வெற்று நிலங்களை அடையாளம் கண்டு அவற்றைப் பயன்படுத்தி விரைவாக பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அதன் ஒரு கட்டமாக இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அமைச்சரின் தலைமையில், நேற்று (22) இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்படி விவகாரம் பற்றி ஆராயப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கை காணிகள் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தின் கீழுள்ள 188 ஏக்கர் நிலத்தில் விரைவாக பயிர் செய்கை ஆரம்பிக்கப்படவிருப்பதோடு 94 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் பயிர் செய்கை ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெல் மற்றும் குறுகிய காலப் பயிர்களை இந்த நிலங்களில் பயிர் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பெரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டம், வேரஸ்கங்க மழைநீர் மற்றும் கழிவு நீர் சுற்றாடல் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இருக்கும் நிலங்களில் இந்த பயிர்ச் செய்கைத் திட்டத்திற்காக பயன்படுத்தப்படவிருக்கிறது.

அரசாங்கத்தை விரட்டியடிக்க

# நடு வீதிக்கு இறங்கவும்

ஆட்சியாளர்கள் அப்பாவி மக்களின் வாழ்க்கையுடன் விளையாட ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இன்னும் சிறிது காலத்தில் அரசாங்கம் தீர்வுகளை முன்வைக்கவில்லை என்றால் மக்களை இணைத்துக்கொண்டு போராட்டங்களை ஆரம்பிப்போம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். மக்கள் வீதிக்கு இறங்கி இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டும். அதற்கு தலைமைத்துவம் வழங்க நாம் தயாராக உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

நாடு இன்று எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு ராஜபக்ஷர்களும், ரணில் தரப்புமே முழுமையாக பொறுப்புக்கூற வேண்டும். பொறுப்பு கூற வேண்டியவர்கள், இப்போதுவரை பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்படவில்லை. ஆனால், இதற்கு எந்த விதத்திலும் தொடர்புபடாத பொதுமக்களே முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போதும் பொதுமக்கள் அமைதியாக இருந்தால் தீர்வு கிடைக்காது. ஆகவே மக்கள் வீதிக்கு இறங்கி இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டும். அதற்கு தலைமைத்துவம் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

அதேபோல் தற்போதைய பாராளுமன்றமும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. புதிய பிரதமர் ரணில், பாராளுமன்றத்திற்கு வந்த நாளில் இருந்து, நாட்டின் நெருக்கடி குறித்து பேசுகின்றாரே தவிர, தீர்வுகள் எதையும் முன்வைக்கவில்லை. ஆனால் நெருக்கடி குறித்து இவர்களை விட, மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே ஆட்சியாளர்கள் தீர்வுகளை முன்வைக்க வேண்டும். நாமும் இந்த பாராளுமன்றத்தில் அதிருப்தியில் உள்ளோம் என்றார்.



# 19 மைனஸே வருகிறது

## கோட்டாவின் அதிகாரங்களில் ரணில் கைவைக்கவில்லை

பா.நிரோஸ்



அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள 21ஆவது திருத்தச்சட்டத்தில் 19 பிளஸுக்குப் பதிலாக 19 மைனஸையே ரணில் விக்கிரமசிங்க கொண்டுவரவுள்ளதாக தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், ஜனாதிபதியின் அதிகாரங்கள் இதனூடாக குறைக்கப்படாது எனவும் தெரிவித்தார்

21 திருத்தச் சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என ரணில் கூறியிருக்கிறார். எவ்வாறாயினும் மீள 19ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்கிற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான நிலையில் 19 பிளஸைக் கொண்டுவருவதற்குப் பதிலாக 19 மைனஸையே ரணில் கொண்டுவர முயற்சிக்கின்றார்.

இலங்கை மின்சார சபையை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்க வேண்டும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதிக்கு அழுத்தங்களை வழங்கி வருவதாக இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவரிடம் ஜனாதிபதி கூறியிருக்க வேண்டும். அதனடிப்படையிலேயே இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் கோப் குழுவில் இதனை வெளிப்படுத்தியிருந்தார். இப்போது இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர பிரச்சினையாக இது மாறியிருக்கிறது. இதனால், இலங்கைக்குக் கிடைக்கவுள்ள இந்தியாவின் எதிர்கால உதவிகள் இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொண்டு வரப்படவுள்ள 21 ஆவது திருத்தச்சட்டத்தில் தற்போதைய ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு பதிலாக, அடுத்த ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கே ரணில் நடவடிக்கை எடுத்திருக்கிறார். ராஜபக்ஷர்களின் குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்டும் வேளையிலேயே அதனை தடுத்து நிறுத்தி அவர்களை ரணில் பாதுகாத்தார். ராஜபக்ஷர்களுக்கு நெருக்கமான தினேஷ் குணவர்தனவையோ அல்லது டலஸ் அழகப்பெருமவையோ பிரதமர் பதவிக்கு ராஜபக்ஷர்கள் நியமிக்கவில்லை. ஏனென்றால், ராஜபக்ஷர்களுக்கு ரணில் மாத்திரமே எப்போதும் நம்பிக்கைக்குரியவர் என்றார்.

ஆட்சியாளர்கள் செய்த தவறுகளை

# 21 மூலமாக திருத்திக்கொள்ள வேண்டும்



இலங்கை, இந்தியாவின் பிராந்தியங்களில் ஒன்று என்பதை இந்தியா இன்னமும் ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையின் நிறைவேற்று அதிகாரியாகிய ஒருவர் மூலமாக செய்யப்பட்ட உடன்படிக்கையின் விளைவே இதுவாகும். ஆகவே, இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். ஆகவே செய்த தவறுகளை 21 ஆம் திருத்தும் மூலமாக திருத்திக்கொள்ள வேண்டும் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

21 ஆம் திருத்த சட்டத்தை கொண்டுவந்து உண்ணவா முடியும் என மக்கள் கேட்கின்றனர். ஒரு சில அரசியல்வாதிகளும் இதையே கேட்கின்றனர். ஆம், 21 ஆம் திருத்தம் உண்பதற்குத்தான். மக்கள் வாழ வேண்டும் என்பதற்காகவும், இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் வரிசையில் நிற்பதை தவிர்க்கவும், உணவு தட்டுப்பாட்டை தவிர்க்கவும் 21 ஆம் திருத்தும் அவசியம். அதாவது நாட்டின் அரசியல் நெருக்கடி நீங்கினால் மட்டுமே பொருளாதார நெருக்கடி நீங்கும். அப்போதுதான் மக்களின் பிரச்சினைகளும் நீங்கும். ஆகவே இவை அனைத்திற்கும் 21 ஆம் திருத்தும் அவசியம் என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்றார்.

இந்த நாள்களில் இந்தியாவில் விளையாட்டுப்போட்டியொன்று இடம்பெற்றுக்கொண்டுள்ளது. பிராந்திய விளையாட்டு போட்டி என்ற பெயரில் இடம்பெறும் இந்த போட்டியின் பிராந்திய பட்டியலில் இலங்கையின் பெயரும் உள்ளடங்கியுள்ளது. இலங்கை, இந்தியாவின் பிராந்தியங்களில் ஒன்று என்பதை இந்தியா இன்னமும் ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையின் நிறைவேற்று அதிகாரியாகிய ஒருவர் மூலமாக செய்யப்பட்ட உடன்படிக்கையின் விளைவே இதுவாகும். இவை தீர்வு காணப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகள் என்றார்.

நாடு எந்த நேரமும்

# உணவு பஞ்சத்தை எதிர்கொள்ள நேரிடும்



வருவாயை ஈட்டித்தரும் சகல துறைகளும் முடங்கியுள்ளதுடன், உணவு உற்பத்திக்கான எந்த வாய்ப்புகளும் இல்லாத காரணத்தால் நாடு எந்த நேரத்திலும் உணவு பஞ்சத்தை எதிர்கொள்ள நேரிடும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். உரத் தடை, எரிபொருள் தட்டுப்பாடு, டொலர் தட்டுப்பாடு போன்றவற்றால் தேயிலை உள்ளிட்ட ஏற்றுமதித் துறைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன . இந்த ஆண்டில் ஏற்றுமதி வருமானத்தில் சுமார் 25% இழப்பு ஏற்படும் என புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

> **வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பணம் அனுப்புதலும் விமானங்களின் வருகையும் கப்பல்களின் வருகையும் 50 % குறைவடைந்துள்ளன. எனவே இலங்கைக்கு வருவாய் கிடைக்கும் துறைகளை முடக்கிவிட்டு, தீர்வுகளை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது**

அன்றாட பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மக்கள் உள்ளனர். 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளும் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன. எரிபொருள் நெருக்கடியால் சமூகத்தின் அனைத்து துறைகளும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளன. அறுவடைக்கு தேவையான உரம் மற்றும் இயந்திரங்களுக்கு எரிபொருள் இல்லாத காரணத்தால் நாடு எந்த வேளையிலும் உணவு பஞ்சத்தை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளது.

உரத் தடை, எரிபொருள் தட்டுப்பாடு, டொலர் தட்டுப்பாடு போன்றவற்றால் தேயிலை உள்ளிட்ட ஏற்றுமதித் துறைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பணம் அனுப்புதலும் சுமார் 50% குறைவடைந்துள்ளது. விமானங்களின் வருகையும், கப்பல்களின் வருகையும் கூட 50 %குறைவடைந்துள்ளன. எனவே இலங்கைக்கு வருவாய் கிடைக்கும் துறைகளை முடக்கிவிட்டு தீர்வுகளை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தாலும் கூட முதலில் எமது கடனாளிகளுடன் நாம் கடன் மறுசீரமைப்பு திட்டமொன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல இம்மாதம் ஜூலை 25, சர்வதேச நிதிச் சந்தைகளில் இருந்து நாம் பெற்ற 1,000 மில்லியன் டொலர் கடனுக்கான காலக்கெடு முதிர்வடைகின்றது. இப்போது கடனை செலுத்த வழியில்லை. நிச்சயமாக நாங்கள் இப்போது வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டோம். எனவே இந்த சகல விடயங்கள் குறித்தும் உடனடியாக தீர்மானம் எடுக்க வேண்டும் என்றார்.

இலங்கையின் நெருக்கடி நிலைமையில்

# நியூசிலாந்து மற்றும் பொதுநலவாய நாடுகளின் ஒத்துழைப்புகள் குறித்து ஆராயத் தயார்

இலங்கையின் பால் கைத்தொழில், விவசாயம் சார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்தி தொடர்பில் நியூசிலாந்தின் உதவியை எதிர்பார்ப்பதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் வலியுறுத்தியுள்ளார். இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் நியூசிலாந்து மற்றும் பொதுநலவாய நாடுகளின் ஒத்துழைப்புகள் குறித்து ஆராய்வதற்கு தயாராக இருப்பதாக நியூசிலாந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் நனையா மஹூதா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மற்றும் நியூசிலாந்தின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் நனையா மஹூதா ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் இருதரப்பு சந்திப்பொன்று இடம்பெற்றது.

தற்போது கொழும்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்று வரும் பணியாளர் மட்ட கலந்துரையாடல்கள் மற்றும் உணவு, எரிபொருள், மருந்து விநியோகம் தொடர்பாக இருதரப்பு நன்கொடையாளர்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து நாடு பெற்றுக் கொள்ளும் ஆதரவு குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், நியூசிலாந்தின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் விளக்கினார். அடுத்த சில வாரங்களில் நிதியைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டினார். நியூசிலாந்து மற்றும் பொதுநலவாய நாடுகளின் ஆதரவு தொடர்பில் ஆராய்வதற்கு நியூசிலாந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இலங்கையின் பால் கைத்தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்தி தொடர்பில் நியூசிலாந்தின் உதவியை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் கோரினார். கோவிட்-19 தாக்கத்தால் இலங்கையில் பொருளாதார சவால்கள் எவ்வாறு மோசமடைந்துள்ளன என்பதை அமைச்சர் பீரிஸ் விளக்கினார்.

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளிலான ஒத்துழைப்பின் வாயிலாக கல்வியை வாழ்வாதாரத்திற்கான பொருத்தமான நிலையாக மாற்றுவது குறித்தும் இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர்.

# 10 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி

## ஜூன் 28, ஜூலை 6ஆம் திகதிகளில் வந்தடையும்

இலங்கையின் உணவு நெருக்கடி நிலைமையில் சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 500 மில்லியன் யுவான் பெறுமதியான அரிசி நன்கொடையின் கீழ் 'பாடசாலை உணவுத் திட்டம்' என்ற இலங்கையின் சிறுவர்களுக்கு உணவளிக்கும் வேலைத்திட்டத்தின் பத்தாயிரம் மெட்ரிக் தொன் அரிசியின் முதல் 2 தொகுதி அரிசி, ஜூன் 25, 30 ஆம் திகதிகளில் இலங்கையை வந்தடையும் என சீன தூதரகம் தெரிவித்திருந்தது. எனினும் முதல் தொகுதி ஜூன் 28ஆம் திகதியும் இரண்டாம் கட்ட அரிசி ஜூலை 6ஆம் திகதியும் இலங்கையை வந்தடையும் என சீன தூதரகம் தற்போது அறிவித்துள்ளது.

# தமிழக அரசின் 2ஆம் கட்ட நிவாரணங்கள் வந்தடைந்தன

தமிழக அரசால் அனுப்பப்பட்ட இரண்டாம் கட்ட நிவாரண பொருட்கள் கொழும்பு துறைமுகத்தை நேற்று (3) அதிகாலை வந்தடைந்துள்ளன.

தமிழக அரசின் இரண்டாம் கட்ட நிவாரணப் பொருட்களை ஏற்றிய கப்பல் தூத்துக்குடியிலிருந்து நேற்று முன்தினம் (22) புறப்பட்டு கொழும்பை நேற்று (23) அதிகாலை வந்தடைந்தது.

அரிசி, பால்மா, மருந்து உள்ளிட்ட 15,000 தொன் நிவாரண பொருட்களை ஏற்றிய கப்பலை தமிழக அமைச்சர்கள் கொடியசைத்து அனுப்பி வைத்தனர்.

இலங்கையர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கில் நிவாரண பொருட்களை வழங்குவதற்கு, கடந்த ஏப்ரல் மாதம் சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்வைத்த தீர்மானத்திற்கு பலரும் ஆதரவு தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


**விற்பனை**

உஸ்வெட்டிகெய்யாவ மற்றும் பமுனுகம ஆகியவற்றுக்கு இடையில் கரையோரத்துக்கு முன்பாக இருக்கும் 30 பேர்ச்ஸ் காணி விற்பனைக்கு உண்டு. சிறிய ஹோட்டலுக்கு உகந்தது. 0774023410


# ஊழியர்களின் தேவைகளுக்கேற்ப நலத்திட்டங்களைச் செயற்படுத்தவும்

தங்கள் ஊழியர்களின் தேவைக்கேற்ப நலத்திட்டங்களைச் ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் செயற்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ள கூட்டு ஆடைகள் சங்கங்கள் மன்றத்தின் (JAAF) பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ், இந்தத் திட்டத்தை பலரும் ஏற்கெனவே செயற்படுத்தி வருகின்றனர்" எனத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார அழுத்தங்கள் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்க அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆடை உற்பத்தியாளர்கள் தங்கள் ஊழியர்களுக்கு நிதி சார்ந்த மற்றும் நிதிசாரா உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 40%ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆடைத் தொழில்துறையானது இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தின் மிகப்பெரிய ஆதாரமாகும்.

"நாங்கள் மிகவும் கடினமான மற்றும் சவால் நிறைந்த நேரத்தை எதிர்கொள்கிறோம். இது போன்ற நேரத்தில், நமது தொழில்துறையானது உழைக்கும் சமூகத்தின் பலத்தில் தொடர்ந்து செயற்படுகிறது. மேலும் அவர்களின் நல்வாழ்வுக்காக உழைக்க வேண்டியது நமது முதன்மையான பொறுப்பாகும் லோரன்ஸ் மேலும் குறிப்பிட்டார்.


**பகிரங்க அறிவித்தல்**

கம்பனியின் தன்மையின் மாற்றத்தின் விளைவாக வரையறுக்கப்பட்ட கம்பனியில் இருந்து ஒரு பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாக (Quoted) பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

07 ஜூன் மாதம் 2022 ஆம் திகதியில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் தமது பங்குகளை பட்டியல்படுத்தியுள்ள இல.487/5, பழைய கொட்டாவ வீதி, பன்னிப்பிட்டிய இல் தமது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள அல்பா ஃபயர் சேர்விசஸ் லிமிட்டட் கம்பனி இலக்கம் PB 00248999 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் (சட்டம்) பிரிவு 11(5) இன் விதிகளின் பிரகாரம் சொல்லப்பட்ட தினத்திலிருந்து சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 11(3) பிரிவின் பிரகாரம் மேற்படி மாற்றத்தின் காரணமாக அல்பா ஃபயர் சேர்விசஸ் பிஎல்சி பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாக (Quoted) அதன் பெயர் மாற்றம் செய்யப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

சபையின் கட்டளைப் பிரகாரம்
F - ஷாமா இஸ்மாயில்
கம்பனி செயலாளர்

இன்பம் கண்டால் சுகாதார சேவைகள்

# யாழில் ஸ்தம்பிக்கும்

■ எம்.றொசாந்த்




எரிபொருள் கிடைப்பதற்கு ஒத்துழைக்காவிடில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்குமென யாழ். போதனா வைத்தியசாலையின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றின் ஊடாக எச்சரித்துள்ளது.

மேலும், எரிபொருள் இன்மை காரணமாகவும், அதன் சீரற்ற வழங்கல் காரணமாகவும் வைத்திய சேவைகள் முடங்கும் ஆபத்து உருவாகியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

சில குறுகிய நோக்கம் உள்ள, மனிதநேயம் அற்ற சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை உருவாக்கி, வைத்தியசாலை ஊழியர்கள் எரிபொருள் பெறுவதை தடுப்பதன் மூலம் இன்பம் காண்கின்றனர்.

அரச அதிபரும் பிரதேச செயலாளர்களும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு துறையினரும் மனப்பூர்வமாக முன்வந்து சுகாதார ஊழியர்களுக்கு உதவ வேண்டும்.

அவ்வாறு இல்லையெனில், அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிதமடைவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே பொது மக்களையும் உரிய தரப்பினரையும் உணர்ந்து செயற்பட்டு, உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## தவறவிட்ட பணத்தை மீட்டுக்கொடுத்த பொலிஸார்

■ நிதர்சன் வினோத், எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் - சுன்னாகம் வழியில் பயணித்த பஸ்ஸில், ராஜலட்சுமி செளந்தர்ராஜன் (வயது 62) என்பவர் தவறவிட்ட 96,000 ரூபாய் பணத்தை போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் துரிதமாகச் செயற்பட்டு மீட்டுக் கொடுத்துள்ளனர்.

குறித்த இடத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த யாழ். மாவட்ட பிராந்திய போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள், பஸ்ஸைக் கொக்குவில் பகுதியில் வழிமறித்து நடத்துநரின் உதவியுடன் சோதனையிட்டனர்.

இதன்போது, 89,000 பணத்தொகை ஆசனத்தின் கீழே இருந்த நிலையில், "7,000 ரூபாய் பணம் மட்டும்தான் காணவில்லை" எனத் தெரிவித்து பணத்தைப் பெற்றுச் சென்றுள்ளார். பணத்தை மீட்டுக்கொடுத்த இரு போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் பொதுமக்கள் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.




## விபத்தில் ஒருவர் பலி; தப்பிய கார் சிக்கியது

■ க. அகரன்

வவுனியா, நொச்சுமோட்டை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பறனட்டகல் கிராமத்தை சேர்ந்த 42 வயதுடைய பாலகிருஸ்ணன் ஸ்தலத்தில் பலியானதுடன், மற்றொருவர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அறுவடை இயந்திரத்தினை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு, மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி, நேற்றுக்காலை சென்று கொண்டிருந்தபோது, அதே திசையில் பயணித்த கார் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

விபத்து ஏற்படுத்திய காரின் சாரதி, சம்பவ இடத்தில் இருந்து காருடன் தப்பிச் சென்றுவிட்ட நிலையில், ஓமந்தை பொலிஸார் காரைக் கைப்பற்றியதுடன், சாரதியை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## திடீர் அறிவிப்பால் யாழில் குழப்ப நிலை



■ நிதர்சன் வினாத்

யாழ்ப்பாணத்தில் பிரதேச செயலாளர்களின் திடீர் அறிவிப்புகளால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பகரமான நிலைமையொன்று நேற்று (23) ஏற்பட்டிருந்தது.

கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்திருந்த நல்லூர் பிரதேச செயலாளர், தமது பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்க வேண்டுமென கூறினார். இதனால் அங்கிருந்தவர்கள் குழப்பமடைந்தனர்.

இதேவேளை, கோப்பாய் பிரதேச செயலகத்தினரால் கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்படுமென அறிவித்தல் ஒட்டப்பட்டது. இதனால் அங்கும் குழப்பம் ஏற்பட்டது.

நீண்ட நேரமாக எரிபொருளுக்காக வரிசையில் நின்றிருந்த மக்கள், அந்த அறிவித்தல்களை கிழித்தெறிந்து குழப்பத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு முன்னுக்குப் பின் முரணான அல்லது மக்களிடத்தில் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையிலான அறிவிப்புகள் விடுக்கப்படுவதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



## குருந்தூர் மலை விவகாரம்: வழக்கு ஒத்திவைப்பு

■ சண்முகம் தவசீலன்

குருந்தூர்மலை தொடர்பான AR 673/18 என்ற வழக்கு, மீண்டும் நேற்று (23) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் சார்பில் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் 11 பேர் முன்னிலையாகியிருந்தனர்.

பொலிஸ் தரப்பில் விளக்கமளிப்பதற்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் சமுத்திர ஜீவ, முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பதிகாரி கலும் சி திலகரத்ன, முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த விதானகே, முல்லைத்தீவு மாவட்ட தலைமை பொலிஸ் பரிசோதகர் அமரசிங்க உள்ளிட்டவர்கள் மன்றில் முன்னிலையாகி விளக்கமளித்தனர்.

இதையடுத்து, வழங்குத் தொடுநர் தரப்பான பொலிஸார், இந்த வழக்குத் தொடர்பாக தங்களுடைய நிலைப்பாடு தொடர்பில், மீள நீதிமன்றில் பதில் கூறுவதற்காக, இந்த வழக்கு விசாரணைகளை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு நீதவான் திகதியிட்டுள்ளார்.

## ஆழ்துளை கிணறு

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான்குளம் அ.த.க.பாடசாலைக்கு ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு பாடசாலையின் அதிபர் நரேந்திரன் தலைமையில் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் இ.கவர்கரினால் கனடாவில் வசிக்கும் கந்தசாமி



பத்மநாதனிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய இக்கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

# யோகா செய்தவன் உலகை வெல்வான்

1,500 பேர் மத்தியில் அம்பாறை அரச அதிபர் டக்ளஸ்

■ சகா



இந்துமதம் உலகத்துக்கு அளித்த பெரும் பொக்கிஷங்களில் ஒன்று யோகாவாகும். மனதை கட்டுப்படுத்தவும் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் யோகா மிக மிக அவசியமாகின்றது என்று தெரிவித்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ. எம்.டக்ளஸ், யோகா செய்தவன் உலகை வெல்வான் என்றார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நடத்திய சர்வதேச யோகாசன தினம் (ஜூன் 21) காலை 6.30 கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜெ. அதிசயராஜ் தலைமையில் இடம்பெற்றது.

அதில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மேற்கண்டவாறு உரையாற்றிய அவர், தொடர்ந்து உரையாற்றுகையில், சிறு பிள்ளைகள் தொடக்கம் முதியவர்கள் வரை 1,500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட ஆன்மிக நிகழ்வில் காலைப் பொழுதில் பேசுவதில் பெருமையடைகிறேன்.

அம்பாறை மாவட்டத்தில் இந்து சமயம் சார்ந்த நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடந்து வருவதில் சந்தோஷம் அடைகிறேன் என்றார்.

இராம கிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில தலைவர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் ஆசியுரை வழங்குகையில், எமது உடல் ஆரோக்கியமாகவும் எமது என்பு வலிமையாகவும் இருக்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் அன்றே சொன்னார். மனதை கட்டுப்படுத்துவதற்கு யோகாசனம் மிகவும் பயனுள்ளது. யோகாவைப் பயின்றவர்கள் மனதைக் கட்டுப்படுத்தி உலகையே வெல்வார் என்றால் மிகையல்ல.

அறநெறி மாணவர்கள் சிறுவயதிலிருந்தே யோகாவை பயின்று கொண்டால் வாழ்க்கை சிறக்கும். ஆரோக்கியமாக நிம்மதியாக வாழ்வதற்கு இது உதவும் என்றார்.



## திருடியவருக்கு விளக்கமறியல்

■ ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காங்கேயனோடை 13 ஆர்.டி.எஸ் வீதிலுள்ள வீட்டை உடைத்து தையல் இயந்திரம், தொலைக்காட்சி என்பவற்றைத் திருடிய சந்தேகநபரை ஜூலை 5ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் உத்தரவிட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில், பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.உம்.றஹீம் தலைமையிலான, பொலிஸ் குழுவினர் மேற்படி சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.



## சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்


■ எப்.முபாரக்

சிறுவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அனைவரும் அக்கறையுடன் செயற்படவேண்டும் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மற்றும் மாவட்ட செயலாளருமான பி.எச்.என். ஜயவிக்ரம வேண்டிக் கொண்டார்.

மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் புதன்கிழமை (22) நடைபெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச செயலக ரீதியாக சிறுவர்களது நலன்கள் மற்றும் தேவைப்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்படல் வேண்டும். சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படல் தொடர்பான சம்பவங்கள் மாவட்டத்தில் பதிவாகின்றன.

இதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில், பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயற்படல் இன்றியமையாதது என்றார்.



## இளைஞனின் சடலம் மீட்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி 3, குதா வீதியிலுள்ள வீடொன்றிலில் இருந்து 23 வயதான பதுர்தீன் சுபைக் அஹமட் புதன்கிழமை (22) மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை (21) இரவு தூக்கத்துக்கு சென்றவரே மரணமடைந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

## தங்குதடையின்றி பெற்றோல் விநியோகம்





■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எவ்வித தங்குதடையுமின்றி அரச உத்தியோகத்தர்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டு வருகின்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் வழிகாட்டலில், பிரதேச செயலக ரீதியாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பிரதேச செயலாளர்களால் அட்டைகள் வழங்கப்பட்டு, குறித்த அட்டைகளுக்கு பெற்றோல் விநியோகிக்கப்படுகின்றது.

ஆரையம்பதி பிரதேசத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பல்வேறு அரச திணைக்களங்களிலும் கடமை புரியும் உத்தியோகத்தார்கள் மிக நீண்ட வரிசைகளில் நின்று பெற்றோலைப் பெற்றுக் கொண்டனர்.

## உணவுப் பாதுகாப்பு தொடர்பான கூட்டம்

■ எம். எஸ். எம். நூர்தீன்

காத்தான்குடியில் உணவுப் பாதுகாப்பு தொடர்பான கூட்டமொன்று காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன ஏற்பாட்டில், சம்மேளன மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (21) இரவு நடைபெற்றது.

பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவர் மௌலவி



எம்.ஐ.ஆதம்லெவ்வை தலைமையில் நடைபெற்ற, இக்கூட்டத்தில் உணவு பாதுகாப்பு தொடர்பில் ஆராயப்பட்டதுடன், எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுமாயின் அதை எவ்வாறு சமாளிப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதெனவும், எதிர்காலத்தில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன.

வெட்டிப் போட்டாலும்

# காங்கிரஸை கைவிடேன்

## வேலு யோகராஜ் பிடிவாதம்

டி. சந்ரு, ஆ.ரமேஸ், நிலமேகம் பிரசாந்த்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற கட்சி, எனது தாய்வீடு; ஆகவே என்னை வெட்டிப் போட்டாலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விட்டுவிட்டு போகமாட்டேன் என நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.

நடைபெற்ற மாதாந்த சபை அமர்வின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

கந்தப்பளை -கொங்கோடியா தோட்டத்தில் மோசடி செய்யப்பட்டதாக கூறப்படும் விடயம் தொடர்பில், சபை உறுப்பினர்களுக்கு இந்தக் காணி தொடர்பில் உண்மை தன்மையை ஆதாரங்களுடன் தவிசாளர் நேற்று (23) வெளிப்படுத்தினார்.

கந்தப்பளை கொங்கோடியா தோட்டத்துக்கு உரிய 80 பேர்ச் காணியை நுவரெலியா பிரதேச சபையின் அபிவிருத்தி பணிக்காக விடுவித்துக்கொள்ள சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறு செயற்படும் போது, உடபுஸல்லாவ பிளான்டேஷன் தோட்ட நிர்வாகத்தில் இக் காணியை 53 வருட குத்தகைக்கு பெற்று, அதில் 26 வருட குத்தகை பணம் செலுத்த இருப்பதால் அத் தொகையை செலுத்துமாறு அறிவித்திருந்தது.

நுவரெலியா பிரதேச சபையால் அத்தொகையை செலுத்த உடன்படுவதாக தெரிவிக்கப்பட்டது. அக்காலக்கட்டத்தில் சபையில் பாரிய அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டதால் திண்ம கழிவு முகாமைத்துவத்திற்காக எடின்பரோ தோட்டத்தில் காணி துண்டொன்று விடுவித்துகொள்ள.23,60,000 ரூபாய் நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு



செலுத்தப்பட்டது. சபையின் நிதி நிலைமை மோசமாக இருந்த வேளையில், கந்தப்பளை கோவில் கமிட்டி, அவர்களுக்கு இந்த காணி உரியதென கூறினார்கள்.

சபையால், கோவில் கமிட்டிக்கு குறிப்பிட்ட குத்தகை தொகையை கொங்கோடியா தோட்டத்துக்குச் செலுத்துமாறு கூறினோம். தனிப்பட்ட வர்த்தகர் ஒருவர் குறிப்பிட்ட தொகையை கொங்கோடியா தோட்டத்துக்கு செலுத்தப்பட்ட பின் தோட்ட அதிகாரி பணம் செலுத்தியவருக்கு இக் காணியை தோட்ட நிர்வாகம் வழங்கியுள்ளது.

கோவில் கமிட்டி, காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்கு இக்காணி உரியதென கூறியதால், சபையில் இக்காணிக்கான எவ்வித கட்டணமும் செலுத்தாத காரணத்தால் இக்காணியை சபைக்கு பொறுப்பேற்கும் நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிடப்பட்டது.

எனவே தான், இக்காணியை தனிப்பட்ட முறையில் விற்று, எனது வளர்ச்சிக்கும் கௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் ஊடகங்களில் சமூக வலைத்தளங்களில் தனிப்பட்ட குழுவால் செய்திகள் பரப்பி வருகின்றார்கள்.

அதேபோன்று இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் சேவையை முன்னெடுப்பதில் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தொடர்ந்தும் மக்கள் சேவையை முன்னெடுப்பேன் என்றார்.

கறுப்பு சந்தைக்கு அனுப்பப்படவிருந்த

## லா.ஃ.ப்ஸ் சிக்கின

எஸ்.கணேசன்



கொழும்பில் கறுப்பு சந்தைக்கு அனுப்புவதற்காக, ஹட்டனில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு தொகை சமையல் எரிவாயுவை பொலிஸாரும், நுகர்வோர் அதிகார சபையினரும் இணைந்து நேற்று (23) கைப்பற்றியுள்ளனர்.

ஹட்டன் பஸ் தரிப்பிடத்துக்கு பின்பகுதியில் உள்ள 'கொரியர்' சேவை வழங்கும் நிலையம் ஒன்றிலிருந்தே இவ்வாறு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

2.5 கிலோ கிராம் நிறையுடைய 8 லாஃப்ஸ் சிலிண்டர்களும், 12.5 கிலோ கிராம் நிறையுடைய 12 சிலிண்டர்களும் கைப்பற்றப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

"கொழும்புக்கு கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கும் வியாபாரம் இடம்பெற்று வந்துள்ளது. இது தற்போது அம்பலமாகியுள்ளது" என்று பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

குறித்த கொரியர் சேவை வழங்கும் நிறுவனத்துக்கு நேற்று முன்தினம் வெற்று சிலிண்டர்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்நிலையில் எரிவாயு நிரப்பட்ட சிலிண்டர்கள் அங்கு மிகவும் சூட்சுமமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்த காட்சிகள் அப்பகுதியில் இருந்த சிசிரிவி கெமராவில் பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரும், நுகர்வோர் அதிகார சபையினரும் சம்பவ இடத்துக்கு வந்து, சிலிண்டர்களை கைப்பற்றினர்.

தமது நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு வழங்கவே எரிவாயு வைக்கப்பட்டிருந்தது என நிறுவனத்தின் பொறுப்பாளர் கூறியுள்ளார். எனினும், அவரின் கூற்று பொய்யென தெரியவந்ததையடுத்து, பொலிஸார் சிலிண்டர்களை கொண்டு சென்றனர். குறித்த நபருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

"எமக்கு கூப்பன் வழங்கப்பட்டாலும் எரிவாயு வழங்கப்படுவதில்லை. இன்னமும் வரிசையில் காத்திருக்கின்றோம். ஆனால் இவர்களுக்கு எப்படி எரிவாயு கிடைக்கின்றது. கறுப்பு சந்தை வியாபாரிகளுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்" என மக்கள் வலியுறுத்தினர்.

2 மில்லியன் ரூபாய் திருட்டுப் பொருட்களுடன்

## வயதான தம்பதி கைது

பாலித ஆரியவன்ஸ



20 இலட்ச ரூபாய் பெறுமதியான திருட்டு பொருட்களுடன் கணவனும் மனைவியும் பதுளை பொலிஸாரால் நேற்று அதிகாலை (23) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

60 வயதுடைய கணவனும் அவரின் 57 வயதான மனைவியும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை, பஹலவத்தயில் உள்ள சந்தேகநபர்களின் வீட்டிலிருந்து, வீடுகளை உடைத்து திருடப்பட்ட பொருட்களான சமையல் எரிவாயு சிலிண்டர்கள், சமையல் எரிவாயு அடுப்புகள், மின்சார உபகரணங்கள், சங்கீத உபகரணங்கள், காலணிகள் உள்ளிட்ட பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

போதைக்கு அடிமையான இளைஞர் ஒருவரை குறித்த தம்பதியினர் பயன்படுத்தி, திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளமை பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், இதனுடன் தொடர்புடைய இளைஞரை கைதுசெய்வதற்கான விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.





## விழிப்புணர்வு

நுவரெலிய மாவட்ட செயலாளர் தலைமையில், வீட்டுத் தோட்டம் பற்றிய விழிப்புணர்வு பயிற்சியும் கன்றுகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வும் நுவரெலியா பொது நூலக கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

டி. சந்ரு

வெளியாள் புகுந்ததால்

## வரிசையில் பெரும் அமளி

எஸ்.கணேசன்

ஹட்டன் நகரில் எம்.ஆர். நகர் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் நேற்று (23) பதற்ற நிலை ஏற்பட்டது. எனினும், பொலிஸார் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு 3 நாள்களுக்கு பின்னர் நேற்றைய தினமே (23) பெற்றோல் வழங்கப்பட்டுள்ளது.

பெட்ரோலைப் பெறுவதற்கு பலர் இரவு - பகலாக வரிசைகளில் காத்திருந்த நிலையில், திடீரென வெளி இடங்களில் இருந்து வந்தவர்கள், வரிசைக்குள் புகுந்து பெற்றோல் பெறுவதற்கு முயன்றுள்ளனர். இதனால் வரிசைகளில் காத்திருந்தவர்கள் ஆவேசமடைந்தார்கள். திடீரென வந்தவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அமைதியின்மை ஏற்பட்டது. எரிபொருள் விநியோகம் தடைபடும் அபாயமும் ஏற்பட்டது.

எனினும், பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து நிலைமையை கட்டுப்படுத்தினர். பின்னர் பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது.

## 2 கறவை பசுக்கள் பதுளையில் மீட்பு

இரா சுரேஷ்குமார்



மஹியங்கனை, கிராந்துருக்கோட்டை பிரதேசத்திலிருந்து பதுளை பிட்டிய இறைச்சிக் கடைக்கு, கொண்டுவரப்பட்ட 2 கறவை பசுக்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிராந்துருக்கோட்டை பகுதியிலிருந்து கறவை பசுக்கள் காணாமல் போவது தொடர்பில், பதுளை மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய, மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதலின் போதே இரண்டு கறவை பசுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவ்விருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் பசுக்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

## வீதி வழுக்கியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழப்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

கொழும்பிலிருந்து நாவலப்பிட்டி வரை பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் மோதிய இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் (22) மாலை கினிகத்தேனை, ரம்பாதெனிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் கினிகத்தேனை, பல்லேவல



பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதானவர் என்று கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் மோட்டார் சைக்கிளில் கினிகத்தேனை நகரிலிருந்து தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது, அவருக்கு முன்பாகப் பயணித்த கார் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது, வீதி வழுக்கியதால் எதிர் திசையில் வந்து கொண்டிருந்த பஸ்ஸில் மோதியுள்ளார்.

இதன்போது உயிரிழந்தவரின் மோட்டார் சைக்கிள் வழுக்கியவாறு பஸ்ஸின் அடியில் சென்றுள்ளது.

இதன்போது கடும் காயமடைந்த அவர், கினிகத்தேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

எனினும் இந்த விபத்தை தடுக்க பஸ்ஸின் சாரதி முயற்சி எடுத்த போதிலும் பஸ் மண்திட்டு ஒன்றில் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவரின் கவனக்குறைவே விபத்துக்கு காரணம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மண்ணெண்ணெய் வரிசையிலும் அமைதியின்மை

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிலையத்துக்கு அருகில் இன்று அதிகாலை தொடக்கம் காணப்பட்ட மண்ணெண்ணெய்க்கான வரிசையிலும் நேற்று (23) காலை அமைதியின்மை ஏற்பட்டது.

நுகர்வோருக்கு மண்ணெண்ணெய் வழங்கும் முறை தொடர்பில் ஹட்டன் பிரதேச கிராம உத்தியோகத்தர்களால் நேற்று முன் தினம் (22) அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றைய தினம் மண்ணெண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அதிகாலை 3 மணி தொடக்கம் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

இந்த நிலையில், இன்று மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுமா என வரிசைகளில் நின்றவர்கள் பல தடவைகள், எரிபொருள் நிரப்பும் பணியாளர்களிடம் வினவியபோதும் அவர்கள் எவ்வித பதிலையும் வழங்காததால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும் சில மணித்தியாலங்களுக்கு பின்னர், எரிபொருள் நிரப்பு பணியாளர்கள் இன்று மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாது என அறிவிப்பு பலகையை காட்சிப்படுத்திய பின்னரே வரிசையில் நின்றவர்கள் கலைந்து சென்றனர்.

## மட்டக்குதிரையால் சாரதிக்கு காயம்

ஆ.ரமேஸ்

நுவரெலியா- பதுளை பிரதான வீதியில் நானுஓயா சந்திக்கு அருகில் நேற்று (23) பிற்பகல் இடம் பெற்ற விபத்தில், மட்டக்குதிரைக்கும் இளைஞனுக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதில் காயமடைந்த இளைஞன் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஸ்கிராப் தோட்ட பகுதியிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த ஓட்டோவில் இரண்டு



மட்டக்குதிரைகள் மோதியுள்ளன. அதிலொரு மட்டக்குதிரைக்கு காயங்கள் ஏற்பட்டன. ஓட்டுநருக்கும் காயம் ஏற்பட்டது. ஓட்டோவின் முன்பக்க கண்ணாடி நொறுங்கியுள்ளது.

பதுளை மாவட்ட பெருந்தோட்ட மக்களுக்கு

## தமிழக நிவாரண பொருட்களை வழங்குக

### அரச அதிபருக்கு அரவிந்தகுமார் எம்.பி கடிதம்

எம். செல்வராஜா

பதுளை பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து பெருந்தோட்டப் பிரிவு மக்களுக்கும் தமிழக நிவாரண உதவிகளை வழங்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் கேட்டுள்ளார்.

அரச அதிபர் தமயந்தி பரணகமைக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிமொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகம் நிவாரண உதவியாக அரிசி பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம், பதுளை மாவட்டத்தின், பிரதேச செயலகங்கள் ஊடாக, சமுர்த்தி நிவாரண உதவிகள் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால், பதுளை பிரதேச செயலகப் பிரிவில், குறிப்பிட்ட வேலைத்திட்டம் ஒரு சாராருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு இருகின்றதாக அறிய முடிகின்றது. பதுளை மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழக நிவாரண உதவிகளின் மூலம் அரிசி பங்கீடுகள் இடம்பெறும் போது, பதுளை பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கு மட்டும் முறையாக கிடைக்காததன் காரணம் என்னவென அறியதர வேண்டும். ஆகவே, இது குறித்து உரிய நடவடிக்கைகளை, உடன் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிவில் யுத்தமொன்றுக்கான அச்சம்; மேகம் கருக்கட்டுகிறது

நிவாரணங்களில் முறைக்கேடுகள், எரிபொருள் விநியோகத்தில் முறைமையின்மை, பதுக்கல்கள், அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளுக்கு எரிபொருள் வழங்கலில் முன்னுரிமை, பாதுகாப்பு கடமையிலிருக்கும் பொலிஸ், இராணுவ அதிகாரிகளுக்கு இடையே கைகலப்பு என வெறுக்கத்தக்கதும் வேண்டத்தகாததுமான செய்திகளே, செவிகளை நிரப்புகின்றன; இவை அபத்தமானவை.

வாகனத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில், கிழமைகள் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த முறைமையின் ஊடாக, சீரான விநியோகத்தை எதிர்பார்க்க முடியாது. பல்வேறு குழப்பங்களை சந்திக்க வேண்டிய நிலைமையே ஏற்படும்.

ஏனெனில், திங்கட்கிழமைக்கென குறித்தொதுக்கப்பட்ட 1 ஆம் இலக்க வாகனங்கள் வரிசையில் நிற்கும்; எரிபொருள் நிலையத்தில் போதியளவான எரிபொருள் இல்லை. அந்த வாகன வரிசை நிறைவடைவதற்கு முன்னரே, எரிபொருள் தீர்ந்துவிடுகின்றது. அப்படியாயின் அதே இலக்கத்தை (இல.1) கொண்ட வாகனங்கள் மறுநாளிலும் வரிசையில் நிற்காது என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

காத்திருந்தவர்கள் வரிசையை விட்டு இடையிலேயே விலகிச்செல்ல மாட்டார்கள். மறுநாளுக்குரிய வாகன இலக்கத்தை (இல.2) கொண்டவர்கள், முதல்நாள் இலக்க வாகன உரிமையாளர்கள் அல்லது சாரதிகளுடன் முரண்படமாட்டார்கள் என்பதை நம்பமுடியுமா? இல்லையேல், வாகன தகடுகளை மாற்றிக்கொண்டு மறுநாளும், அதற்கு அடுத்தடுத்த நாளும் வரிசைக்கு வரமாட்டார்கள் என்பதை எவ்வாறு நம்புவது. அதனால்தான் இந்த முறைமை இன்னுமின்னும் முரண்பாட்டுக்கே வழிசமைக்கும்.

வாகனங்களுக்கான சகல ஆவணங்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தி, எரிபொருள் வழங்கும் அளவுக்கு ஒவ்வோர் எரிபொருள் நிலையத்திலும் போதியளவான ஆட்பலம் இல்லை என்பதால், நிலைமையை இன்னும் இலகுபடுத்தும் வகையில் இலத்திரனியல் ரீதியில் முறைமையொன்றை ஏற்படுத்தவேண்டும்.

அதேபோல, வழங்கப்படும் நிவாரண பொருட்களிலும் மோசடிகள் இடம்பெறாத வகையில் திட்டங்களை வகுக்கவேண்டும்.

மக்கள் பல கோணங்களிலும் அழுத்தங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமை நீடிக்குமாயின், ஒருவருடன் ஒருவர் மோதிக்கொள்வர்.

கேட்கும் அளவுக்கு நியாயமான தீர்வுகள் முன்வைக்கப்படுவதில்லை. ஆகையால், ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில், கொதித்துக்கொண்டிருக்கின்றனர். இது சிவில் யுத்தத்துக்கு வழிசமைத்துவிடும். எனவே, நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்களை எட்டுவதே காலத்தின் தேவையாகும்.

ஏமாற்றுதல், கொள்ளையடித்தல், களவெடுத்தல், அபகரித்தல் உள்ளிட்டவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. களவெடுப்பவர்கள் சிக்கிக்கொள்வார்களாயின், அடித்து நொறுக்குவதைத் தவிர வேறொரு மாற்றீடுகளை சிந்திப்பதற்கு மனமிருக்காது. ஏனெனில் ஒவ்வொருவரும் நொந்துக்கொண்டுதான் இருக்கின்றனர்.

உண்மையாக கையேந்துபவர்களையும் ஏமாற்றுப் பேர்வழிகளென நினைத்து ஒதுங்கிச்செல்லும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நெருக்குவாரங்கள் கழுத்தை நெரிக்குமாயின் ஒவ்வொருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டு, மோதலாக வெடித்து, சிவில் யுத்தத்துக்கே வழிசமைத்துவிடும் என்பதை நினைவில் கொள்க.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

கவர்ச்சிக் காதலால், எடுத்த எடுப்பிலேயே காதலில் மூழ்கிவிடுபவர்கள், பின்னர் இன்னல்களுக்குள் சிக்குகிறார்கள். காதல், உண்மையானதா, காமத்திலானதா என்பதை ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

புற அழகை மட்டும் முதன்மைப்படுத்தி, காதலை முடிவு செய்யக்கூடாது. காமத்துடன் காதலிப்பவர்கள், அதை வெறுப்புடன் முடிக்கும் நிலைவரும்.

காதல் என்றவுடன், உள்ளத்தின் அழகைவிட, தேகத்தின் அழகே முக்கியம் என எண்ணும் தற்கால இளைய தலைமுறையினர், திருமணத்தின் பின்னரான அறவாழ்வைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் அல்லவா!

ஆழமான அன்பு நிலையில் கணவன் - மனைவி இருவரும் தூய்மையுடன், தெய்வீக இல்லறத்தில் இணைந்தால், அவர்களின் பரம்பரையும் நீடூழி வாழ்ந்து, உலகம் மெச்சும் தம்பதிகளாவர். தெய்வீகமற்ற வாழ்வு குடும்ப சச்சரவுகள், விவாகரத்து எனப் பல இடையூறுகளைச் சந்திக்கின்றது.

முதுமையிலும் களிப்புடன் வாழ்பவர்களைப் பாருங்கள். உண்மையான வாழ்க்கை அதுவென ஒத்துக்கொள்வீர்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## இலங்கையின் மின்சக்தியை
# கபளீகரம் செய்யும் இந்தியா



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையர்களின் இன்றைய நெருக்கடி, அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது. அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றவியலாத ஓர் அரசாங்கமும் அதை வீட்டுக்கு அனுப்பவியலாத மக்களும் பேச்சு மன்றமாய் பாராளுமன்றமும் திகழ்கின்ற ஒரு நாட்டில், எதிர்பார்ப்பதற்கு அதிகமில்லைத் தான்!

நெருக்கடிகள், மக்களுக்கு வாய்ப்பை மட்டும் வழங்குவதில்லை; ரணிலுக்கு பிரதமராகும் வாய்ப்பைக் கொடுத்தது; இன்ன பிறருக்கு, அடுத்த ஜனாதிபதி கனவைக் கொடுத்துள்ளது.

அயல்நாடுகள், அவர்தம் நலன்களை வெற்றிகரமாக வென்றெடுப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் நெருக்கடிகள் வாய்ப்பாகிறது. ஜூன் 10ஆம் திகதி, 'பொது முயற்சியாண்மைக்கான பாராளுமன்ற தெரிவுக்குழு' (கோப் குழு) முன்னிலையில் கருத்துரைத்த இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சீ. பெர்டினன்டோ, இந்திய பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக்கொண்டதற்கு இணங்க, வடபகுதியில் காற்றாலைகளை அமைக்கும் அனுமதியை, இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்குமாறு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தனக்கு உத்தரவிட்டதாகக் கூறினார்.

இதை மறுத்து, ஜனாதிபதி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டார். 24 மணித்தியாலங்களுக்குள் தனது கருத்தை, மின்சார சபைத் தலைவர் மீளப்பெறுவதாக அறிவித்தார். சில நாள்களில் அவர், பதவியில் இருந்து விலகியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்தார்.

குறித்த திட்டத்தின்படி, மன்னார், பூநகரி பகுதிகளில் அதானி குழுமத்தின் Adani Green Energy Limited (AGEL) நிறுவனம், காற்றாலை மற்றும் சூரியசக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் உரிமத்தைப் பெற்றுள்ளது. அதானிக்கு இதை வழங்குமாறு, தான் கட்டளையிடவில்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில், மின்சார சபைத் தலைவரின் கருத்து இந்தியாவில் ஒரு புயலைக் கிளப்பியுள்ளது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (19) Sunday Times பத்திரிகை குறித்த விடயம் தொடர்பில் முக்கியமான செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. அதானி குழுமத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற தகவல் பரிமாற்றங்களின் உள்ளடக்கத்தின் முக்கியமான அம்சங்களை அச்செய்தி கோடுகாட்டியுள்ளது.

2021 நவம்பர் மாதம் AGEL நிறுவனத்தின் நிறைவேற்றதிகாரி இலங்கை திறைசேரியின் செயலாளருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அதில் 'எமது நிறுவனம், மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கான வலுவுள்ள மீள்சக்தித் திட்டங்களை, அதன் வளர்ந்து வரும் எரிசக்தி தேவைக்கு ஏற்றவாறு விரைவாக அமைப்பதன் மூலம், எம் நிறுவனத்தின் தடங்களை அதிகரிக்க முன்மொழிகிறது. மேலும், AGEL நிறுவனமானது, இலங்கையில் சுமார் 5GW காற்றாலை மின் திட்டங்கள் மற்றும் 2GW சூரியசக்தித் திட்டங்களை இலங்கையில் அமைக்கும். இதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரமானது எம்மால் அமைக்கப்படவுள்ள இலங்கை-இந்தியா மின்சார இணைப்பு (cross border grid connection) மூலம் இந்தியாவுக்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்யும். இது இலங்கையில் கணிசமான முதலீடு மற்றும் நீண்ட கால ஏற்றுமதி வருவாய்க்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும். மேலும், இவ்விணைப்பின் வழி போட்டித் தன்மைவாய்ந்த மின்சார வர்த்தகத்தை செயற்படுத்த இயலுமாகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் முக்கியத்துவம் பல்முனைப்பட்டது. முதலாவது, இலங்கையின் தூயசக்தி நோக்கிய நகர்வானது, மிகவும் மெதுவானதாக இருக்கிறது. இலங்கையின் உள்ள பல நிறுவனங்களுக்கு காற்றாலைகளையும் சூரிய மின்கலங்களையும் நிறுவுவதற்கு, அரசாங்கம் தொடர்ச்சியாகத் தயக்கம் காட்டி வந்துள்ளது. பல தடைகளை உள்ளூர் நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ளன.

இந்நிலையிலேயே, அதானி நிறுவனத்தின் இக்கடிதமானது கவனிப்புக்குரியது. இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதல் இல்லாமல் இவ்வாறானதொரு கடிதம் எழுதப்பட்டிருக்காது. இந்தப் பின்புலத்தின் அடிப்படையிலேயே மின்சார சபைத் தலைவரின் கருத்தை நோக்க வேண்டியுள்ளது.

இக்கடிதத்தில் கவனிக்க வேண்டிய இரண்டாவது அம்சம், அதானி நிறுவனம் இலங்கையில் தூயசக்தியை உற்பத்தி செய்து, அதை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய முன்மொழிகிறது. இது மிகவும் ஆபத்தானது மட்டுமன்றி, அனுமதிக்கக் கூடாததும் ஆகும்.

இவ்விடத்திலேயே, இலங்கை அரசாங்கத்தின் மோசமான நடத்தையும் அதனோடு இணைந்த ஊழலும் வெளிப்படுகிறது. இலங்கை நிறுவனங்களுக்கு வழங்க மறுத்த அனுமதியை, எவ்வாறு அதானி நிறுவனத்துக்கு அரசாங்கம் வழங்கியது? இலங்கையே மின்சார நெருக்கடியில் சிக்கித் தவிக்கையில், இலங்கையில் பெறப்பட்ட மின்சாரத்தை இந்தியாவுக்கு அனுப்ப யார் அனுமதித்தது? இலங்கையில் பெறப்பட்ட மின்சாரத்தை, இலங்கைக்கே அதானி நிறுவனம் விற்கும் திட்டத்துக்கு எவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டது? இவை விடை தெரியாத வினாக்கள்; ஆனால், இலங்கையர்கள் கேட்ட வேண்டிய கேள்விகள்.

மூன்றாவது, மிக முக்கியமான அம்சம், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மின்கம்பங்களையும் இணைப்பையும் அதானி நிறுவனம் அமைக்கப்போவதாகக் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருநாடுகளுக்கும் இடையிலான மின்இணைப்பு என்பது, கடந்த இரு தசாப்தங்களாக உரையாடப்படும் ஒரு விடயம்.

பல விடயங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கை இத்திட்டத்துக்கு அனுமதி மறுத்து வந்துள்ளது. குறிப்பாக, போரின் முடிவின் பின்னர், இந்தியா இவ்விணைப்புத் திட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. இலங்கையின் தயக்கம் நியாயமானது.

இவ்வாறானதோர் இணைப்பால், இலங்கைக்கான நன்மைகள் குறைவு. காலப்போக்கில் இலங்கை மின்சாரத்துக்கு இந்தியாவை நம்பியிருக்க வேண்டியிருக்கும். இது, சக்திப் பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலானது. அதேவேளை, இலங்கையில் இந்திய நிறுவனங்கள் மின்உற்பத்தி செய்து, இந்தியாவுக்கு அனுப்பினாலும் சரி, இலங்கைக்கு வழங்கினாலும் சரி, மின்சார உற்பத்தியின் மீதான இலங்கையின் ஏகபோகமும் சுதந்திரமும் இல்லாமல் போகும்.

இங்கு, நேபாளத்தின் உதாரணத்தை நோக்குவது தகும். உலகில் அதிகளவான நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றலை உடைய நாடுகளில் நேபாளம் முதன்மையானது. ஆனால், நேபாளத்தால் இன்றுவரை தனது தேவைக்கான நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியவில்லை. காரணம், அதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் அங்கு நடைபெறவில்லை.

நேபாள-இந்திய மின்இணைப்புக் காரணமாக, நேபாளம் இன்றும் மின்சாரத்துக்கு இந்தியாவை நம்பியிருக்கிறது. இதைத் தொடருவதற்காக நேபாளத்தில் நீர்மின்சக்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த இந்தியா தொடர்ச்சியாகத் தடைபோடுகிறது. நேபாள அரசாங்கம் இந்தியாவுடன் முரண்பாட்டுப் போக்கைக் கடைப்பிடித்தால், நேபாளத்துக்கான மின்சாரத்தை மட்டுப்படுத்துவதனூடு இந்தியா செயற்படுகிறது.

2009இல் நேபாளத்தில் மாஓவாதிகள் ஆட்சிக்கு வந்த நிலையில், அவர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில், மின்சார விநியோகத்தை இந்தியா நிறுத்தியது. இந்தக் கதைதான், இலங்கைக்கும் நடக்கும் என்பதை நினைவில் கொள்வது நல்லது.

2006ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் சம்பூர் இருந்தபோதே, அங்கு அனல் மின்நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கான உடன்படிக்கையை இந்திய நிறுவனம், இலங்கை அரசாங்கத்துடன் கைச்சாத்திட்டது. அதன்படி, உற்பத்திசெய்யப்படும் மின்சாரத்தில் ஒருபகுதி, இந்தியாவுக்கு அனுப்பவும் உடன்பட்ட சரத்து அந்த உடன்படிக்கையில் இருந்தது.

மக்கள் போராட்டமும் நீதிமன்ற தடையுத்தரவும் அதை முடிவுக்குக் கொண்டுவந்தபோதும், கடந்தாண்டு அதே இடத்தில் சூரிய மின்கலங்களின் வழி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அனுமதியை இந்தியா பெற்றுக் கொண்டது. ஆனால், மின்நிலையத்துக்காக வெளியேற்றப்பட்ட மக்கள், காணி இழந்த நிலையில் இன்னமும் இன்னல்களை அனுபவிக்கிறார்கள்.

பத்திரிகைச் செய்தி அம்பலப்படுத்திய இன்னோர் ஆவணம், மன்னார், பூநகரியில் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான அதானியின் நிறுவனத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் கையெழுத்தான புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகும். அதில், 'இலங்கையின் வடமாகாணத்தின் எல்லையில் உள்ள இலங்கைக்கு சொந்தமான கடற்பரப்பில், மிதக்கும் சூரியகலம் மற்றும் காற்றாலை வசதிகளை ஏற்படுத்துவதற்காக ஆய்வு செய்ய, குறித்த நிறுவனத்துக்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்கும்'. இதன்மூலம் இலங்கையின் வடபகுதியில், எல்லையற்ற அதிகாரங்களை மின்உற்பத்தி சார்ந்து - குறித்த நிறுவனத்துக்கு இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது. நிலங்கள் மட்டுமல்ல, எங்கள் கடலும் சேர்ந்தே களவுபோகிறது.

அதானி குழுமம், காற்றாலைகளை அமைக்க அனுமதி பெற்றுள்ள மன்னார், பூநகரி ஆகிய பகுதிகளில், இத்திட்டங்களுக்கு மக்களின் பலத்த எதிர்ப்புகள் உண்டு. அதுகுறித்து விரிவாக அடுத்த வாரம் பார்க்கலாம்.

## கடிதங்கள்

### கல்முனை சந்தைக்கு அருகிலுள்ள வடிகான்:
### சீர் செய்யுமாறு கோரும் பொது மக்கள்

கல்முனை மாநகர பொதுச் சந்தைக்கு அருகில் உள்ள வடிகானின் ஒரு பகுதி உடைந்தும் இடைநடுவே சுவர் இடிந்து விழுந்தும் உள்ளதால் நீண்ட நாள்களாக நீர் ஓடாமல் தேங்கி காணப்படுகின்றது. இதனால், துர்நாற்றம் வீசுவதுடன் சந்தைக்கு வருகின்ற பொதுமக்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

வடிகானுக்கு முறையாக மூடியின்றியும் வடிகானுக்கு அருகில் புற்கள் வளர்ந்து பற்றையாகவும் காட்சியளிப்பதுடன் வடிகானுக்குள் உடைந்த நிலையில் கூரை ஓடுகள், கற்கள், பிளாஸ்டிக் போத்தல்கள், தகர ரின்கள், பொலித்தீன் பைகள், குப்பைகள் என நிறைந்து காணப்படுகின்றன. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை பிரதேசங்களில், திண்மக்கழிவகற்றல், வடிகான் முகாமைத்துவம் சிறப்பாக இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இதுபோன்று சுகாதாரத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் பங்கம் விளைவிக்கும் பல இடங்கள், மாநகர எல்லைக்குள் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இது தொடர்பில், கல்முனை மாநகர மேயர், மாநகர ஆணையாளர் உட்பட, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்.என்.எம். அப்ராஸ்



புதுடெல்லி

# ஆயிரம் கோடியை சுருட்டிய ‘கிரிப்டோ’ மோசடிக் கும்பல்

உலகம் முழுவதும் டிஜிட்டல் நாணயமான ‘கிரிப்டோகரன்சி’யில் முதலீடு செய்வது அதிகரித்த வண்ணம் உள்ளது. குறிப்பாக கிரிப்டோகரன்சியானது இளைய தலைமுறையினரிடம் பெருமளவு பிரபலமாகி வருகிறது.

குறுகிய காலத்தில் அதிக இலாபம் கிடைக்கும் என்று கூறப்பட்ட நிலையில், கடந்த சில தினங்களாக கிரிப்டோகரன்சி கடும் சரிவை சந்தித்தது. இதனால் கிரிப்டோகரன்சியில் முதலீடு செய்தவர்கள் பெரும் இழப்பை சந்தித்து வருகின்றனர்.



இது ஒருபுறமிருக்க, போலியான நிறுவனங்கள் மூலம் கிரிப்டோகரன்சியில் முதலீடு செய்தவர்கள், தங்கள் பணத்தை இழந்துள்ளனர். இவ்வாறு போலி கிரிப்டோகரன்சி பரிமாற்றத்தின் காரணமாக, இந்தியர்கள் ஆயிரம் கோடி ரூபாயை இழந்துள்ளதாக சைபர் பாதுகாப்பு நிறுவனமான ‘கிளவுடுசெக்’ தெரிவித்துள்ளது.

முறையான அனுமதி பெற்ற கிரிப்டோகரன்சி வர்த்தக தளங்களைப் போன்று போலியான இணையதளங்களை உருவாக்கி, சமூக வலைத்தளங்கள் மூலம் தகவலை பரப்புகின்றனர். குறுகிய காலத்தில் அதிக இலாபம் கிடைக்கும் என்றும் ஆசை வார்த்தைகளை கூறுகின்றனர். இதனை நம்பி முதலீடு செய்த முதலீட்டாளர்கள் மொத்தமாக பணத்தை இழந்திருக்கிறார்கள்.

போலி கிரிப்டோ இணையதளங்கள் மூலம் மோசடி செய்பவர்கள், பயனர்களை அணுகி, அவர்களை வரவேற்கும் வகையில் அறிமுக சலுகையாக 100 டொலர் கிரெடிட் நோட்டை வழங்குகிறார்கள். இத்தகைய சலுகைகள் பயனர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக வரவு வைக்கப்படுகின்றன. இதைப் பார்த்ததும் அவர்களின் வலையில் விழுந்த பயனர்கள், தங்களிடம் உள்ள மொத்த பணத்தையும் அந்த இணையதளத்தில் செலுத்துகிறார்கள். அதிக முதலீடு கிடைத்தும், சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்களின் பணத்தை மோசடியாளர்கள் எடுத்துக்கொள்கிறார்கள்.

இதுதொடர்பாக, ‘கிளவுட்செக்’ தலைமை நிர்வாகி கூறுகையில், “பயனர்கள் தங்கள் பணத்தை முதலீடு செய்த பிறகு, மோசடி இணையதளத்தின் அனைத்து வர்த்தகம் மற்றும் திரும்பப் பெறும் வசதிகளும் முடக்கப்பட்டுள்ளன” என்றார்.



புதுடெல்லி

மகனின் முகவரி தெரியாததால்

## 11 மணி நேரம் தவித்த தமிழக மூதாட்டி

திருவண்ணாமலை, ஆரணியை சேர்ந்தவர் வசந்தி (60). இவரது மகன் ராஜேஷ், மனைவியுடன் பெங்களூரில் வசித்து வருகிறார். கடந்த சில தினங்களுக்கு முன்பு மகன், மருமகளை பார்ப்பதற்காக பெங்களூர் சென்றிருந்தார்.

இந்நிலையில், ஒருநாள் காய்கறி வாங்குவதற்காக வசந்தி கடைக்கு சென்றார். பின்னர் வீட்டுக்குச் செல்ல வழி தெரியவில்லை. அலைபேசியையும் வீட்டில் வைத்துவிட்டுச் சென்றதால் யாரையும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

இதனால் ஒரு பாடசாலையின் முன்னால் நீண்ட நேரமாக அமர்ந்திருந்தார். இதை பார்த்த அப்பகுதி மக்கள், பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். பொலிஸார் விரைந்து வந்து வசந்தியிடம் விசாரித்தனர்.

அவருக்கு மகனின் விலாசத்தை சொல்ல தெரியவில்லை. ஆனால், ஆரணியில் உள்ள தனது வீட்டின் முகவரியை கூறி இருந்தார். இதையடுத்து, ஆரணி பொலிஸ் நிலையத்துடன் பெங்களூர் பொலிஸார் தொடர்பு கொண்டு பேசினர். இதையடுத்து, வசந்தியின் வீட்டுக்குச் சென்ற ஆரணி பொலிஸார், அவரது கணவர் ராஜேந்திரனிடம் இருந்து மகனின் (ராஜேஸ்) அலைபேசி இலக்கத்தை வாங்கினர். இதன்பின்னர், பெங்களூர் பொலிஸார், ராஜேசை தொடர்பு கொண்டு, வசந்தி பொலிஸ் நிலையத்தில் இருப்பது பற்றி தெரிவித்தனர்.

இதையடுத்து, உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கு ராஜேசும் மனைவியும் வந்தனர். தனது மகன், மருமகளை பார்த்ததும் வசந்தி ஆனந்த கண்ணீர் விட்டார். வசந்தியை அவரது மருமகள் கட்டி தழுவி ஆசுவாசப்படுத்தினார். மேலும் பொலிஸாருக்கும் நன்றி கூறினர். காலை ஏழு மணிக்கு சென்று வழிமாறிய வசந்தியை மாலை ஆறு மணிக்குத் தான் அவரது மகன், மருமகள் பார்த்தனர்.



அயோத்தி

சரயு நதியில்

## மனைவிக்கு முத்தம் கொடுத்த கணவன் மீது தாக்குதல்

உத்தரப் பிரதேசத்தின் சரயு நதியில், மனைவிக்கு முத்தம் கொடுத்த கணவர் சுற்றியிருந்த கும்பலால் தாக்கப்பட்டார். இந்த சம்பவம் அடங்கிய வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில், ஆண் ஒருவர் சரயு நதியில் நீராடுகிறார். அவர் அருகில் நிற்கும் பெண், அவரது மனைவி எனத் தெரிகிறது. அவர்கள் இருவரும் இணைந்து புனித நீராட முற்பட, சுற்றி இருந்தவர்கள் அந்தத் தம்பதியை சுற்றிவளைக்கின்றனர். அப்போது அந்த நபர், தனது மனைவியை முத்தமிட, சுற்றி இருந்தவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அந்தப் பெண்ணையும் ஆணையும் தனித்தனியாக அப்புறப்படுத்தி அந்த ஆணை அடிக்கின்றனர்.

“இது போன்ற அசிங்கத்தை அயோத்தியாவில் அனுமதிக்கமாட்டோம்” எனக் கூறுகின்றனர். பதறிப்போன அப்பெண், தனது கணவரைப் பாதுகாக்க முயற்சிக்கிறார். ஆனால், அவரால் முடியவில்லை. இறுதியாக இருவரையும் சரயு நதியிலிருந்து அந்த கும்பல் அப்புறப்படுத்துகிறது.

இது குறித்து, அயோத்தி பொலிஸ் இன்பெக்டர் கூறியதாவது; அந்த வீடியோ ஒரு வாரத்துக்கு முன்னர் எடுக்கப்பட்டது. அந்தத் தம்பதி புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுப்போம். அந்தத் தம்பதி எங்கு வசிக்கின்றனர் என்றும் தேடி வருகிறோம் என்றார்.

சரயு நதி, கங்கையின் 7 கிளை நதிகளில் ஒன்று. சரயு நதிக்கரையில் தான் அயோத்தி அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை

## தங்கம் கடத்திய இலங்கை பெண் கைது

இலங்கை தலைநகர் கொழும்பு நகரில் இருந்து> சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு பயணிகள் விமானம் நேற்றுமுன்தினம் (22) வந்தது. அப்போது, பயணிகளின் உடமைகளை சுங்க அதிகாரிகள் சோதனை செய்தனர். இதில், இலங்கையை சேர்ந்த பெண் பயணி உள்ளாடைக்குள் தங்கக்கட்டி, தங்க பசைகள் மறைத்து கடத்தி வந்திருப்பது தெரியவந்தது. அதன் மதிப்பு இந்திய ரூபாயில் 1.59 கோடி ஆகும். அதன் எடை 3.42 கிலோ கிராம். தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து, பெண் பயணியை கைது செய்தனர்.

சென்னை

அ.தி.மு.கவின் பொது, செயற்குழு கூட்டம்

## பரபரப்புடன் கூடி சலசலப்புடன் நிறைவு

ஒற்றைத் தலைமை குறித்து விவாதிக்க வேண்டும் என்று அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க.) பொதுக் குழுவில் கோரிக்கை வைக்கப்பட்டதுடன் நேற்றைய கூட்டம் சலசலப்பில் முடிந்தமையால், அடுத்த பொதுக்குழு மற்றும் செயற்குழு ஜூலை 11ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டது.

அ.தி.மு.க பொதுக் குழு மற்றும் செயற்குழு கூட்டம் வானகரத்தில் நேற்று (23) காலை நடைபெற்றது. இதில் பேசிய முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், பொதுக்குழு மற்றும் செயற்குழு சார்பில் அவைத் தலைவரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.




இதனைத் தொடர்ந்து பேசிய அவர், “இரட்டை தலைமையால் தி.மு.கவை எதிர்த்து செயல்பட முடியாத நிலை உள்ளது. இரட்டை தலைமையின் செயல்பாட்டில் ஒருங்கிணைப்பு இல்லை. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போன்று ஒற்றைத் தலைமை ஏற்பட வேண்டும். எனவே, பொதுக் குழுவில் இரட்டை தலைமையை இரத்து செய்து விட்டு, ஒற்றை தலைமை குறித்து விவாதிக்க வேண்டும். அடுத்து பொதுக்குழு திகதியை அறிவிக்க வேண்டும்” என்றார்.

இதன்பிறகு பேசிய அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், ஜூலை 11ஆம் திகதி அடுத்த பொதுக்குழு மற்றும் செயற்குழு நடைபெறும் என்று அறிவித்தார். பரபரப்புடன் கூடிய பொதுக்குழு சலசலப்புடன் நிறைவு பெற்றது.

யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் நவலோக ஹொஸ்பிட்டல்ஸ்

# கைகோர்ப்பு



யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் நவலோக ஹொஸ்பிட்டல்ஸ் ஆகியன இணைந்து, புதிதாக பிறந்த குழந்தைகளின் எதிர்காலத்துக்கு திட்டமிடக்கூடிய காப்புறுதித் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளன. கல்வி நிதியத்தைக் கட்டியெழுப்புவது, பரந்தளவு ஆரோக்கிய பராமரிப்பு செலவுகளுக்கான காப்பீடு மற்றும் முக்கியமாக எந்த சந்தர்ப்பத்திலும் குழந்தைகளின் கனவுகள் மற்றும் எதிர்பார்ப்புகள் கலந்துவிடாமல் பாதுகாக்கும் நிதி பாதுகாப்பு வலை போன்றன இதில் அடங்கியுள்ளன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், “புதிய பெற்றோருக்கு இந்தத் திட்டம் சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்த உறுதியற்ற காலப்பகுதியில், இலங்கையின் சிறுவர்களை பாதுகாப்பதற்கு புதிய வழிமுறைகளுக்கு முக்கியத்துவமளித்து அவற்றை செயற்படுத்துகின்றோம். பெற்றோருக்கு முன்கூட்டியே திட்டமிடுவதற்கு இந்தப் பங்காண்மை உதவியாக அமைந்திருப்பதுடன், சிறுவர்களின் எதிர்காலம் பாதுகாப்பாக அமைந்துள்ளது என்பதை அறிந்து நிம்மதியாகத் திகழலாம்” என்றார்.

கோம்ஸ் தொடர்ந்து குறிப்பிடுகையில், “புதிய தலைமுறையை பாதுகாப்பதில் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய நோக்கம் அதிகளவு கரிசனை கொண்டுள்ளது. ஆரோக்கியம், கல்வி, நிதிப் பாதுகாப்பு போன்றவற்றில் புத்தாக்கமான பாதுகாப்பு அடிப்படையிலான தீர்வுகள், இலங்கையர்களின் கனவுகளுக்கு வலுச்சேர்ப்பதில் நீண்ட தூரம் பயணிப்பதாக அமைந்திருக்கும்” என்றார்.

இந்தப் பங்காண்மை தொடர்பாக யூனியன் அஷ்யூரன்ஸ் பங்காண்மைகள் பிரிவின் தலைமை அதிகாரி லுசிலி டயஸ் கருத்துத் தெரிவிக்கையில், “சிறந்த ஆரோக்கியப் பராமரிப்பு சேவைகள் வழங்குநரான நவலோக ஹொஸ்பிட்டல்ஸ் உடன் எமது பங்காண்மை என்பது புதிய பெற்றோருக்கு பாதுகாப்பான சேமிப்பை பெற்றுக் கொடுக்கும் புதிய திட்டமாக அமைந்துள்ளது. இந்தப் பெற்றோருக்கு தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்கான சேமிப்பு பயணத்தை பிறந்தவுடனேயே ஆரம்பிக்கும் அனுகூலத்தைக் கொண்டிருப்பார்கள். முக்கியமாக, முதல் தவணைக் கட்டணத்திலிருந்து சொத்தை நீங்கள் உருவாக்குவதுடன், வேறெந்தவொரு நிதி ஆவணத்திலிருந்தும் கிடைக்காத ஒரு பயனாக இது அமைந்துள்ளது” என்றார்.

நவலோக வைத்தியசாலையில் பிரசவத்துக்கான சேவைகளைப் பெற்று, புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு பாதுகாப்பை பெற்றுக் கொள்வதற்கு தகைமையளிக்கும் வவுச்சரை பெற்றுக் கொள்ளலாம். கல்வி நிதியம், வக்சீன்கள் மற்றும் மருத்துவ பரிசோதகளுக்கான காப்பீடு மற்றும் இதர ஆரோக்கிய அனுகூலங்கள் மற்றும் நிதித் திட்டமிடலில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உறுதியற்ற தன்மைகளிலிருந்து பாதுகாப்பளிக்கும் அம்சங்கள் போன்றன இந்தத் தீர்வுகளில் அடங்கியுள்ளன.

நவலோக ஹொஸ்பிட்டல்ஸ் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி ரசிக திலகரட்ன கருத்துத் தெரிவிக்கையில், “எமது வாடிக்கையாளர்களுக்கு புதிய மற்றும் அர்த்தமுள்ள வழிகளில் வழங்கும் பெறுமதியை மேம்படுத்திக் கொள்ள முடிவதால், யூனியன் அஷ்யூரன்ஸ் உடனான இந்தப் பங்காண்மை தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கையில் நுகர்வோருக்கு உயர்தர சேவைகளை வழங்குவதில் இரு நிறுவனங்களும் நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளன. எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் அனுகூலங்கள் மற்றும் பெறுமதி தொடர்பான பயணத்தில் இணைந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்” என்றார்.

## DFCC வங்கி Mastercard உடன் கைகோர்ப்பு

இலங்கையில் வியாபாரங்களுக்கு ஆதரவளிக்கும் முயற்சியில், DFCC வங்கி, இணையத்தின் ஊடாக பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்வதற்கும் இலத்திரனியல் முறையில் பணக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு வலுவூட்டும் வகையில் தனது கொடுப்பனவு நுழைமுகத்தில் Mastercard ஐ செயல்படுத்துவதாக அறிவித்துள்ளது.



Mastercard கொடுப்பனவு நுழைமுகம் செயல்படுத்தப்படுவது வங்கியின் டிஜிட்டல் சேவை இடமளிப்பு முயற்சியில் மற்றொரு சாதனை இலக்காகும். டிஜிட்டல் பொருளாதாரத்தை நாடு அதிகரித்துச் செல்லும் அளவில் உள்வாங்கி வருவதால், வங்கியானது டிஜிட்டல் மாற்ற உள்வாங்கலை தொடர்ந்து முன்னெடுப்பதுடன், வங்கிச் சேவைத் துறையில் தீவிரமாக பங்களித்து வருகிறது.

பல்வேறு விலைமதிப்புகளுடன் தங்கள் தயாரிப்புகளுக்கு விலை நிர்ணயம் செய்யும் நுண், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான வணிகங்களுக்கு இந்தச் சேவை கிடைப்பதால், டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதற்கான அவற்றின் வளர்ச்சி வாய்ப்புகளுக்கு இது இடமளிக்கின்றது. Mastercard கொடுப்பனவு நுழைமுகமானது, நுண்-வணிகங்கள் வழக்கமான முறையில் பரிவர்த்தனை செய்யும் தளங்கள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதை ஏற்கும். இது ஒவ்வொரு வணிகத்திற்கும் சேவை வழங்குவதை பிரத்தியேகமாக வடிவமைத்துக் கொள்ள வங்கிக்கு இடமளிப்பதுடன், வசதியாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் அதே வேளையில் உள்ளார்ந்த இடர்களை இறுக்கமாக கட்டுப்படுத்தி நிர்வகிக்க வழிவகுக்கும்.

DFCC வங்கியால் கொடுப்பனவு நுழைமுக சேவை அமல்படுத்தப்படுவது தொடர்பில் DFCC வங்கியின் சில்லறை வங்கிச் சேவை, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறைப் பிரிவுகளுக்கான சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரியான ஆசிரி இத்தமல்கொட கருத்து வெளியிடுகையில், “அனைவருக்கும் ஏற்ற வங்கி என்ற வகையில், பரந்த அளவிலான கொடுப்பனவுத் தெரிவுகளுடன் நம்பகமான மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் கொடுப்பனவு உள்கட்டமைப்புக்கான முக்கிய தேவை இருப்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். மின் வர்த்தகச் சேவைகளுக்கு இடமளிக்க எங்கள் வணிகர் வலையமைப்பிற்கு வலுவூட்டுவதற்காக, மிகவும் பிரபலமான கொடுப்பனவுச் செயலிகளில் ஒன்றாக இருக்கும் Mastercard கொடுப்பனவு நுழைமுக சேவைகளுடன் இந்த ஒத்துழைப்பில் நாங்கள் காலடியெடுத்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இது வாடிக்கையாளர்கள், தொழில்துறை கூட்டாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு சௌகரியத்தைக் கொடுக்கும். இலங்கை முழுவதும் வணிக வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்தவும் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்” என்று குறிப்பிட்டார்.

இந்த ஒத்துழைப்பின் மூலம், DFCC வங்கியானது, சேவை வழங்குநர்களுடன் கூட்டுசேர்வதன் மூலமும், வளர்ந்து வரும் சந்தைப் பிரிவுகளில் ஊடுருவுவதன் மூலமும் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த முயற்சி குறித்து கருத்து தெரிவித்த Mastercard இன் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான முகாமையாளரான சந்துன் ஹபுகொட, “DFCC வங்கியுடன் ஒத்துழைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது வணிகர்கள் தங்கள் வாடிக்கையாளர்கள் தாம் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே பணம் செலுத்துவதை ஏற்றுக்கொள்வதற்கும், டிஜிட்டல் வழிமுறை கொடுப்பனவுகளின் புதிய உலகில் போட்டித்திறனை மேம்படுத்துவதற்கு அவர்களின் அணுகல் மற்றும் பாதுகாப்பிலிருந்து பயனடைவதற்கும் உதவுகிறது. Mastercard நிறுவனத்தில், வாடிக்கையாளர்களுக்கு தங்குதடையற்ற, பாதுகாப்பான மற்றும் அட்டையை உட்புகுத்தும் எந்திரத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவையற்ற அனுபவத்தை வழங்கும் சிறந்த வகுப்பிலான தீர்வுகள் மற்றும் கொடுப்பனவு முறைகளை அறிமுகம் செய்வதில் நாம் எப்போதும் கவனம் செலுத்தியுள்ளோம்” என்று குறிப்பிட்டார்.

பிரான்ஸ்

# பிரான்ஸில் 'புர்கினி' அணியத் தடை

பிரான்ஸில் கிரினொபெல் நகரில் பொது நீச்சல் குளங்களைப் பயன்படுத்த பிகினி என்ற குறிப்பிட்ட உடையை அணிய வேண்டுமென்ற விதி உள்ளது.

ஆனால், பொதுநீச்சல் குளங்களை இஸ்லாமிய மத பெண்கள் பயன்படுத்தும் வகையில் 'புர்கினி' என்ற உடையும் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புர்கினி என்பது பர்தா மற்றும் பிகினி என்ற வார்த்தைகளின் கூட்டு சொல்லாகக் கூறப்படுகிறது. அதாவது இது உடல் முழுவதையும் மூடி முகம் மட்டும் தெரியும் வகையிலான உடையாகும்.



எனினும் இவ் உடையானது பொது இடங்களில் மத அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் இருப்பதாகத் தெரிவித்து பல்வேறு தரப்பினரும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

இவ் வழக்கில் தீர்ப்பு அண்மையில் வெளியானது. அதில், நாடு முழுவதும் பொது நீச்சல் குளங்களில் புர்கினி அணிய தடை விதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நியூயோர்க்



## விதிகளை மீறியதால் நொறுக்கப்பட்ட 100 மோட்டார் சைக்கிள்கள்

நியூயோர்க்கில் சட்டத்திற்கு புறம்பாகத் தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டு புல்டோசர் மூலம் நொறுக்கப்பட்டுள்ளது.

இதனை நியூயோர்க்கின் மேயர் ஏரிக் ஆடம்ஸ் கொடியசைத்து தொடங்கி வைத்துள்ளார். சட்டத்திற்கு புறம்பாகத் தயாரிக்கப்பட்ட இந்த மோட்டார் சைக்கிஸ்களைப் பயன்படுத்துவது பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்க கூடும் எனத் தெரிவித்துள்ள ஆடம்ஸ் மேயர் ,இம் மோட்டார் சைக்கிள்கள் தயாரிக்கப்படுவது கடந்த வருடத்தை விடவும் இந்த வருடத்தில் அதிகரிப்பதாகக் கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்ட 2000 வாகனங்களில் முதல் கட்டமாக 100 வாகனங்கள் புல்டோசர் மூலம் நொறுக்கப்பட்டுள்ளதாகவும், அவை மறுசுழற்சி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரான்

## 105 பேருக்கு மரண தண்டனை



ஈரானில் இவ் வருடம் ஜனவரி மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரை சிறுபான்மையினர் 105 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என ஐநா வருத்தம் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகளுக்கான பேரவை கூட்டத்தின் போதே ஐநா இதனைத் தெரிவித்துள்ளது.

மேலும் ஈரானில் அவசியமில்லாமல் மரண தண்டனைகள் விதிக்கப்படுவது பற்றிய அறிக்கையொன்றையும் இதன் போது ஐநாவின் பொது செயலாளரான ஆண்டனியோ குட்டரஸ் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த அறிக்கையில் " ஈரானில் கடந்த 2020 ஆம் ஆண்டு 260 பேரும், கடந்த வருடத்தில் 310 பேரும் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

அதே போல் இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரை சிறுபான்மையினர் 105 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர். அதிலும் ஈரானில் சிறுபான்மையினரே அதிகமாக தூக்கிலிடப்படுகின்றனர்.

அத்துடன் கடுமையான குற்றங்கள் செய்யாதவர்களுக்கும் மரண தண்டனை வழங்கப்படுகிறது " இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஈரானில் நியாயமான முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும், சர்வதேச சட்டத்தை மீறி சிறுவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுவது தொடர்கின்றது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனினும், இக்குற்றச் சாட்டுக்களுக்கு ஈரான் மறுப்புத் தெரிவித்துள்ளதுடன், இது ஒரு தலைப்பட்சமான குற்றச்சாட்டு என்றும் தெரிவித்துள்ளது.

பெரு

## வீட்டின் கீழே அதிசயக் கல்லறை



தென் அமெரிக்க நாடான பெருவில், வீடொன்றின் கீழே புதைந்து கிடந்த ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்லறையை ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

கல்லறையில் இருந்த உடலைச் சுற்றி வெள்ளி மற்றும் தாமிரம் ஆகிய உலோகங்கள் இருந்ததாகவும், அது இன்கா பேரரசை சேர்ந்த ஒருவரின் உடலாக இருக்கலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். வீட்டுப் பராமரிப்புப் பணியின் போதே இக் கல்லறை கண்டெடுக்கப்பட்டதாகவும், இதனையடுத்து சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்கா பேரரசின் எச்சங்கள் உள்ளதா? என ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்



## பாலியல் கொடுமைகள் அதிகரிப்பு

### பஞ்சாப்பில் அவசரநிலைப் பிரகடனம்

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் அதிகரித்து வரும் பாலியல் வன் கொடுமைச் சம்பவங்களால் அங்கு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பஞ்சாப்பில் நாளொன்றுக்கு நான்கு அல்லது ஐந்து பாலியல் வன் கொடுமைச் சம்பவங்கள் பதிவு செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் பெண்களும், சிறுவர்களும் பாலியல் வன்கொடுமை களுக்கு ஆளாவதைத் தடுக்கத் தற்போது அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதோடு, இரண்டு வாரங்களுக்குள் இது குறித்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் பஞ்சாப் மாகாண உள்துறை அமைச்சர் அட்டா தரார் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## உலகின் மிக அழகானவர்கள் இவர்கள் தானாம்

ஹொலிவூட் நடிகர் ரொபர்ட் பாட்டின்சனும், நடிகை ஆம்பர் ஹெர்டும் உலகின் மிக அழகான முக அமைப்பை கொண்டுள்ளதாக லண்டனைச் சேர்ந்த முக அறுவை சிகிச்சை மையமொன்று தெரிவித்துள்ளது. முக அமைப்பு குறித்து இந்நிறுவனம் கிரேக்க பாரம்பரிய PHI முறையில் நடத்திய ஆய்விலேயே இத் தகவல் வெளியாகியுள்ளது.



குறித்த ஆய்வில் ரொபர்ட் பாட்டின்சனைத் தொடர்ந்து, ஹென்றி கேவிலும், ஆம்பர் ஹெர்டை தொடர்ந்து, கிம் கர்தாஷியனும் அழகான முக அமைப்பைக் கொண்டு ள்ளதாகத் தெரிவிக்கப்ப-ட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இன்று ஐந்தாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி:

# இலங்கையை வீழ்த்துமா அவுஸ்திரேலியா?

இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது, கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் இன்று பிற்பகல் 2.20 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரை ஏற்கெனவே இலங்கை கைப்பற்றியபோதும் அடுத்து டெஸ்ட் தொடர் வரவிருக்கின்ற நிலையில் இப்போட்டி முக்கியத்துவமாகிறது.

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரையும் உள்ளடக்கிய முழுமையான சுற்றுப்பயணத்தை அவுஸ்திரேலியா மேற்கொண்டு சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றபோதும் காலம் செல்லச் செல்ல சுழற்பந்துவீச்சுக்கான அவுஸ்திரேலிய அணியின் தடுமாற்றமானது அதிகரித்து வருகிறது.

அதுவும் இத்துணை நாளும் நடைபெற்ற மைதானங்களை விட டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ள காலி மைதானமானது மேலும் சுழற்சியை வழங்குமென்ற நிலையில் அவுஸ்திரேலிய அணியின் நம்பிக்கையை மீட்டெடுக்க இப்போட்டியில் துடுப்பாட்டவீரர்கள் மேம்பட்ட பெறுபேற்றைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக அனைத்துத் துடுப்பாட்டவீரர்களும் ஆரம்பங்களைப் பெறுகின்றபோதும் எவரும் போட்டியைத் தீர்மானிக்கக் கூடிய வகையிலான குறிப்பிடத்தக்க இனிங்ஸொன்றை ஆடவில்லை.

அந்தவகையில், மர்னுஸ் லபுஷைன், கமரொன் கிறீனுக்காக ஸ்டீவ் ஸ்மித், ஜொஷ் இங்கிலிஷ் களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. தவிர, பற் கமின்ஸ், ஜொஷ் ஹேசில்வூட்டுக்கு ஓய்வு வழங்கப்படாலெம்ன்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக இலங்கையணியானது மாற்றமெதுவையும் மேற்கொள்ளாது என எதிர்பார்க்கப்படுகின்றபோதும், நிரோஷன் டிக்வெல்லவுக்காக தனுஷ்க குணதிலக மீண்டுன் அணிக்குத் திரும்பும் வாய்ப்பு காணப்படுவதோடு, தொடர் ஏற்கெனவே வெல்லப்பட்ட நிலையில் பானுக ராஜபக்ஷ, லஹிரு மதுஷங்க உள்ளிட்டோருக்கும் வாய்ப்பு வழங்கப்படலாம்.

இலங்கை டெஸ்ட் தொடருக்கான

## பாகிஸ்தான் குழாம் யசீர் ஷா




இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் குழாமில் சுழற்பந்துவீச்சாளர் யசீர் ஷா இடம்பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் இறுதியாக விளையாடிய அவுஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் குழாமில் இடம்பெற்றிருந்த சுழற்பந்துவீச்சாளர்கள் சஜிட் கான், ஸஹிட் மஹ்மூட் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

இந்நிலையில் புதுமுக சுழற்பந்துவீச்சு சகலதுறைவீரர் அக்ஹா சல்மான், முன்னாள் அணித்தலைவர் சஃப்ராஹ் அஹ்மட், நசீம் ஷா ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: பாபர் அஸாம் (அணித்தலைவர்), மொஹமட் றிஸ்வான் (விக்கெட் காப்பாளர்), அப்துல்லாஹ் ஷஃபிக், அஸார் அலி, பாஹீம் அஷ்ரஃப், பவாட் அலாம், ஹரிஸ் றாஃப், ஹஸன் அலி, இமாம்-உல்-ஹக், மொஹமட் நவாஸ், நசீம் ஷா, நௌமன் அலி, சல்மான் அலி அக்ஹா, சஃப்ராஸ் அஹ்மட் (விக்கெட் காப்பாளர்), சௌட் ஷகீல், ஷகீன் ஷா அஃப்ரிடி, ஷண் மசூட், யசீர் ஷா.

## ஜுவென்டஸ் செல்லும் நெய்மர்?



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான நெய்மரை இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் கைச்சாத்திட ஜுவென்டஸின் பயிற்சியாளர் மாஸிமில்லியானோ அல்லெகிரி விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், ஆண்டுக்கு 30 மில்லியன் யூரோக்களுக்கு அதிகமான ஊதியத்தைப் பெறும் 30 வயதான நெய்மர், ஜுவென்டஸுக்குச் செல்ல வேண்டுமானால் குறைந்தளவு ஊதியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தவிர, 2027ஆம் ஆண்டு வரையில் பரிஸ் ஸா ஜெர்மைனுடன் நெய்மர் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கின்ற நிலையில், அவரை குறிப்பிட்டளவொரு தொகைக்கே செல்வதற்கு பரிஸ் ஸா ஜெர்மைன் அனுமதிக்கும்.

பரிஸ் ஸா ஜெர்மைனுக்காக 92 போட்டிகளில் 69 கோல்களை நெய்மர் பெற்றுள்ளார்.

மோகன் கனேஸ் இருபதுக்கு 20 தொடர்:

## சம்பியனான காரைதீவு விவேகானந்தா

அஸ்ஹர் இப்றாஹீம்

அமரர் மோகன் கனேஸ் 15ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு ஜொலி கிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திய மோகன் கனேஸ் இருபதுக்கு - 20 கடினபந்து கிரிக்கெட் தொடரில் காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

காரைதீவு கனகரெட்ணம் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் காரைதீவு விளையாட்டுக் கழகத்தை வென்றே விவேகானந்தா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 24 ஜூன் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.